RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 31, 26 யூலை 2024 இதழ்:- 09

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000
$1000 $20/month

## 28 யூலை 2024 ஞாயிறு நடைபெறவுள்ள “இசையும் தமிழும்” நிகழ்வில் கலந்து கொள்ள ரொறன்ரோ வந்துள்ளார் பர்வின் சுல்தானா




என் இனிய உறவுகளே! முல்லைத்தீவு அன்பு இல்லக் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை 13வது ஆண்டாக நடாத்தும் தமிழும் இசையும் - இராப்போசன விருந்தும் நிகழ்வில் கொள்வதற்காக செந்தமிழ் சொல் அழகி பேராசிரியை பர்வின் சுல்தானா அவர்கள் 24 யூலை 2024 புதன்கிழமை ரொறன்ரோவுக்கு வருகை தந்துள்ளார். அவரை விமான நிலையத்தில் சமூக செயற்பாட்டாளரும் தமிழின உணர்வாளருமான திரு சிவா வேலுப்பிள்ளை அவர்களும் அவரது மகள் ஆர்த்தி வேலுப்பிள்ளை அவர்களுக்கும் ஈழநாடு சார்பாக வரவேற்று அழைத்து வந்துள்ளார்கள். என் இனிய உறவுகளே! வாருங்கள்! யுத்தம் தின்றவர்கள் பெற்ற குழந்தைகளை வாழ வையுங்கள்! அத்துடன் நல்ல தமிழ் பேச்சுக் கேளுங்கள்! இனிய தமிழ் பாடல் கேட்க வாருங்கள்! மேலதிக விபரங்களை 12ம் 13ம் பக்கம் பார்க்க. தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் - யூலை நினைவுநாளில் கனடா பிரதமர்



இலங்கையில் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் குறித்து பொறுப்புக்கூறவேண்டும் என கனடா தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கும் என கனடா பிரதமர்ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். கறுப்பு ஜீலையின் 41 வது வருடத்தை குறிக்கும் விதத்தில் வெளியிட்டு ள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது- 41 வருடங்களிற்கு முன்னர் இன்றைய தினம் இலங்கையின் கொழும்பில் தமிழ் பொதுமக்கள் வர்த்தக நிலையங்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் ஆரம்பமாகின. (3ம் பக்கம் பார்க்க)

## கனடாவில் இந்துக்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்குமாறு விஸ்வ ஹிந்து பரிஷத் கோரிக்கை!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




21 Years Real Estate Experience

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


**Neilson/Tapscott**

Scarborough $475,000
Bedrooms: 2 Washrooms: 2
close to the Hwy 401 and the TTC

**Corner Park St. N & Dalhousie**

Peterborough $549,000
Bedrooms: 3+1 Washrooms: 2
Great Opportunity for Investors

**McCowan Rd & HWY 401**

Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Luxurious Penthouse Condo


**Lawrence /Morningside**

Scarborough $425,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony


**HWY 48 & High Street**


Georgina $774,900
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Never Lived Homes


**Church St N & Rossland Rd W**

Ajax $950,000
Bedrooms: 3 Washrooms: 3
Upgraded Hardwood Floor

**Taunton/Garden**

Whitby $969,000
Bedrooms: 3 Washrooms: 2
Professionally Renovated Home

**Midland Ave/ Eglinton Ave**

Scarborough $1,150,000
Bedrooms: 3 Washrooms: 2
Excellent Location, Min To Subway


**Dundas / Henry**

Whitby $999,000
Bedrooms: 3+2 Washrooms: 2
Easy access to Whitby Go

**Dorian Drive & Christine Elliot**


Whitby $ 2000
Bedrooms: 2 Washrooms: 1
Brand New Basement Unit

**Ninth line and 14th Ave**


Markham $1,950
Bedrooms: 2 Washrooms: 1
Newly Renovated

**Warden / Finch**


Scarborough $2,700
Bedrooms: 3 Washrooms: 2
Corner Unit In A High Demand Area

*Looking for more house?*

# www.AgentSiva.com

**WILL BRING THE BEST RESULTS!**

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் - யூலை நினைவுநாளில் கனடா பிரதமர்



இலங்கையில் பாதிக்கப்படக் கூடிய சமூகங்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் குறித்து பொறுப்புக்கூறவேண்டும் என கனடா தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கும் என கனடா பிரதமர்ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜீலையின் 41 வது வருடத்தை குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது - 41வருடங்களிற்கு முன்னர் இன்றைய தினம் இலங்கையின் கொழும்பில் தமிழ் பொதுமக்கள் வர்த்தக நிலையங்களை இலக்கு வைத்து தாக்கு தல்கள் ஆரம்பமாகின.

ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் இழக்கப்பட்டன. மேலும் பல தமிழர்கள் காயமடைந்தனர். பாலியல் வன்முறைகளிற்கு இலக்கானார்கள். நாட்டிலிருந்து தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். கறுப்பு ஜீலை எனப்படும் தமிழர்களிற்கு எதிரான இனக்கலவரம். பதற்றங்களை அதிகரித்தது. அது பின்னர் தசாப்தகால ஆயுத மோதலாக பரிணமித்தது.

இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக அது விளங்குகின்றது. 2022 மே18ம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை கனடாவின் நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டது நிறைவேற்றியது.

இந்த அர்த்தமற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப் பிழைத்தவர்களை நினைவுகூர்வதில் கனடாவின் தமிழர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள தமிழ் சமூகத்தினருடன் ஐக்கியத்தை உள்ளதை வெளிப்படுத்துவதற்கான கனடாவின் அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்துகின்றது.

மனித உரிமைகளின் உறுதியான பாதுகாவலன் என்ற அடிப்படையில் இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களிற்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஸ்பிரயோகங்கள் குறித்து பொறுப்புக்கூறவேண்டும் என கனடா தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கும்.

கறுப்பு ஜீலையின் பின்னர் 1800 தமிழர்கள் கனடாவிற்கு வருவதற்கும் தங்களினதும் தங்கள் குடும்பங்களினதும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் தேவையான விசேட நடவடிக்கைகளை கனடா எடுத்தது.

உலகில் அதிகளவு புலம்பெயர் தமிழர்கள் தற்போது கனடாவிலேயே வாழ்கின்றனர். ஒவ்வொருநாளும் அவர்கள் எங்கள் சமூகத்திற்கு வழங்குகின்ற பங்களிப்பை நாங்கள் கொண்டாடுகின்றோம். நாங்கள் எப்போதும் அவர்களை பாதுகாப்போம்.

இன்றைய நாளில் கறுப்பு ஜீலையில் துயரத்தை சந்தித்த அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் தங்களின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதில் நான் கனடாவின் பிரஜைகளுடன் இணைந்து கொள்கின்றேன்.

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன காலமானார்

புதிய சமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தனது 81 வயதில் காலமாகியுள்ளார்

விக்கிரமபாகு கருணாரத்ன, இடதுசாரி அரசியலுக்காகத் தன் இன்னுயிரை அர்ப்பணித்து, மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் தன் கொள்கைகளுக்காக நின்று போராடிய தலைவர் ஆவார்.



இவர் தமிழர் பிரச்சினைகளில் எப்போதும் ஒரே கொள்கையை கடைப்பிடித்து அது தொடர்பான போராட்டங்களில் முன்னிலை வகித்துவந்தவர்களில் ஒருவர் ஆவார். அத்துடன் இன பிரச்சினையை தீர்க்கும் எண்ணம் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ் தேசியப் பிரச்சினை தொடர்பான தீர்வில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கூறி வந்திருந்திருந்தார்

மேலும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனவர்கள் தொடர்பான நம்பிக்கை, இராணுவ கையிருப்பில் உள்ள நிலங்களை மக்களுக்கு மீள கையளித்தல் போன்ற விடயங்களை தனது அதிகாரத்தை கொண்டு தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் இவர் தெரிவித்திருந்தார் நீண்டகாலம் சுகவீனமுற்றிருந்த நிலையில் காலமாகியுள்ளார். அரசியல் தலைவர்கள் பலர் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளுக்காக துணிச்சலுடன் வாழ்நாள் முழுவதும் குரல் கொடுத்த அவருக்கு ஈழநாடு வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது.

## விக்கினேஸ்வரனுக்கு நன்றி தெரிவித்த சுமந்திரன்

நான் மூளையை உபயோகித்துச் செயற்படுகின்றேன் என்று விக்னேஸ் வரன் கூறியமைக்கு நன்றியைத் தெரி விப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். சுமந்திரனுக்கு தமிழ்த் தேசிய உணர்வு இல்லை எனவும், அவர் மூளையை மாத்திரம் பாவித்து செயற்படுகின்றார் என விக்னேஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் 24 யூலை 2024 நடைபெற்ற நிகழ்வொன் றில் கலந்து கொண்டிருந்த சுமந்திரனிடம், விக்னேஸ்வரனின் கருத்து தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், விக்னேஸ்வரன் கூறுகின்ற விடயங்களுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. ஆனால், என்னுடைய மூளையை உபயோகித்து நான் சிந்திக்கின்றேன் என்று அவர் கூறியமைக்கு என்னுடைய நன்றியை அவருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு ஆசிரியனாக தன்னுடைய மாண வர்கள் மூளையைத் தான் பாவித்து சிந்தித்துக் கூறுகின்றனர் என்று அவர் கண்டு பிடித்திருக்கின்ற கண்டுபிடிப்பு மிகவும் அற்புதமானது.

ஆனால், அவர் எதனைப் பாவித்துச் சிந்திக்கின்றார் என்று எனக்குத் தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544







## கனடா – அருள்மிகு
# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd  Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 • www.shrimuththumaari.cin



**ஆலயம் திறந்திருக்கும் நேரம்**
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

**பூசை நேரம்:**
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

## அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக் கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமான வரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடைபெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக் களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# கனடாவில் இந்துக்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்குமாறு விஸ்வ ஹிந்து பரிஷத் கோரிக்கை!




கனடாவில் இந்து மதத்தினை பின்பற்றுகின்ற மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற உடல் ரீதியிலான தாக்குதல்களை தடுப்பதற்கு கனேடிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

கனடாவில் இந்து கோயில் ஒன்று சேதப்படுத்தப் பட்டுள்ளதுடன், கோவிலின் மீது எதிர்ப்பு வாசகங்களும் எழுதப்பட்டுள்ளன. எனவே, இதற்கு கண்டனம் வெளியிட்டுள்ள விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு, குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கனேடிய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

கனடாவில் அமைதியை விரும்பும் இந்து சமூகத்துக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் வகையில் இவ்வாறான பிரிவினைவாத செயல்கள் முன்னெடுக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே, இதற்கு எதிராக, கடுமையான நடவடிக்கையை எடுக்குமாறும் விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு தனது எக்ஸ் தளத்தில் வலியுறுத்தியுள்ளது. கனடாவில் அமைந்துள்ள இந்து கோயில்கள் மீது காலிஸ்தான் பிரிவினைவாதிகள் தொடர்ச்சியாக வன்முறை தாக்குதல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

ஒன்றாரியோ மாகாணத்தின் ஹம்ன்டன் நகரில் உள்ள சுவாமி நாராயண் ஆலயம் காலிஸ்தான் பிரிவினைவாதிகளினால் சேதமாக்கப்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் சீக்கியர்கள் அதிகம் வாழும் பஞ்சாப் மாநிலத்தை தனிநாடாக மாற்ற வேண்டும் எனவும், அதற்கு காலிஸ்தான் என பெயரிட வேண்டும் எனவும் காலிஸ் தான் பிரிவினைவாதிகள் கோரி வருகின்றனர். அத்துடன், கனேடிய அரசாங்கம் காலிஸ்தான் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக இருப்பதாக தற்போது குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கனடாவில் இந்து மத ஸ்தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு எதிராக விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கம் இஸ்லாமியரிடம் மன்னிப்புக் கோர அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

நாட்டில், கொரோனா தொற்றும் காலத்தில், முன்னெடுக்கப்பட்ட கட்டாய உடற் தகனக் கொள்கையினால் பாதிக்கப்பட்டவர்களிடம், அரசாங்கம் மன்னிப்பு கோருவது தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நிலத்தடி நீருக்குப் பாதிப்பு ஏற்படும் எனத் தெரிவித்து, கொவிட் -19 தொற்றினால் இறந்தவர்களின் உடல்கள் கட்டாயத் தகனம் செய்ய வேண்டுமென தெரிவிக்கப் பட்டது.

இதில் 276 முஸ்லிம்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் நடத்தப்பட்ட ஆய்வில் அவ்வாறு கொவிட் -19 தொற்று உறுதியான நிலையில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதால் நிலத்தடி நீருக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாது எனக் கண்டறியப்பட்டது.

இந்த நிலையில், பாதிக்கப்பட்ட சமூகத்திடம் அரசாங்கம் மன்னிப்பு கோருவதற்காக, நீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறு சீரமைப்பு அமைச்சர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ஆகியோர் முன்வைத்த யோசனைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு யூலை கலவரம்:- நீதிக்கான போராட்டம் தொடரும்!

## பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமாரன் சூளுரை

கறுப்பு ஜூலை கலவரங்களால் ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்பு அடுத்தடுத்த தலைமுறைகளாகக் கடத்தப்படுவதாகவும், அவற்றை ஒருபோதும் மறக்கடிக்க முடியாது எனவும் சுட்டிக் காட்டியுள்ள பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் உமா குமாரன், இவ் விடயத்தில் நீதிக்கான தமது போராட்டம் தொடரும் என உறுதியளித்துள்ளார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட கறுப்பு ஜூலை கலவரங்கள் அரங்கேறி 23 யூலை 2024 41 வருடங்கள் கடந்திருக்கின்றன. தமிழர்கள் மத்தியில் மிகமோசமான தாக்கத்தையும் தமிழர் வரலாற்றில் முக்கிய திருப்பங்களையும் ஏற்படுத்திய இக்கலவரங்கள் தொடர்பில் இன்னமும் நீதியோ, பொறுப்புக்கூறலோ நிலைநாட்டப்படவில்லை.

இது குறித்து அண்மையில் பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான முதலாவது தமிழ்ப் பெண் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்ட உமா குமாரன் அவரது உத்தியோகபூர்வ எக்ஸ் தளப்பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கின்றார். அப்பதிவில் அவர் கறுப்பு ஜூலை கலவரங்களை அடுத்து தமிழ்மக்கள் உலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்ததாகவும் அவர்கள் இன்னமும் நீதிக்காகக் காத்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.



கிழக்கு லண்டனில் பிறந்த உமா குமாரனின் பெற்றோர் யாழ்ப்பாணத்தைப் பூ ர்விகமாகக் கொண்டவர்கள் என்ற போதிலும் போரின் விளைவாக பிரிட்டனுக்குப் புலம்பெயர வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அதன்படி கறுப்பு ஜூலை கலவரங்களின் போது இடம்பெற்ற கொடுமைகள் குறித்து தனது பெற்றோர் தனக்குக் கூறியிருப்பதாக எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்துள்ள உமா குமாரன், அக்கலவரங்களினால் ஏற்பட்ட உளவியல் ரீதியான பாதிப்பு அடுத்தடுத்த தலைமுறைகளாகக் கடத்தப்படுவதாகவும், அவற்றை ஒருபோதும் மறக்கடிக்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இன்றைய தினத்தில் கறுப்பு ஜூலை கலவரங்களில் உயிரிழந்த அனைத்து உயிர்களையும் நினைவு கூருவதாகவும், இவ் விடயத்தில் நீதிக்கான தமது போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆயுதபடையினரை அழைக்குமாறு ஜனாதிபதி ரணில் உத்தரவு!

பொதுமக்களின் பாதுகாப்பிற்காக நாடு முழுவதும் உள்ள ஆயுதப் படையினரை அழைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ 24 யூலை 2024 நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்

நாற்பதாவது அதிகாரம் கொண்ட பொது பாதுகாப்புச் சட்டத்தின் பன்னிரண்டாவது பிரிவின்படி அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி இந்த நியமனத்தை வழங்கியுள்ளார்.

# ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை

தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்குமான புரிந்துணர்வு உடன்பாடு நேற்றைய தினம் தந்தை செல்வா கலையரங் கில் கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படுமா கைவிடப்படுமா அல்லது அனைத்து கட்சிகளும் கைச்சாத்திடுமா அல்லது இடையில் சிலர் விலகி விடுவார்களா இப்படியான பல கேள்விகளுக்கு மத்தியில் இந்த விடயம் நிகழ்ந்து முடிந்திருக்கின்றது.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் நடைபெற்ற முக்கியமானதோர் அரசியல் நகர்வாக இதனைக் கருத முடியும். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயல்பட்டு வரும் பலவாறான கட்சிகளை ஒரு நேர்கோட்டில் சந்திக்கச் செய்ய வேண்டும் என்னும் முயற்சி பெரியளவில் வெற்றி பெறவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளில் பலர், பல்வேறு சந்தர்ப்பங்களில் பலவாறான முயற்சிகளை மேற் கொண்ட போதிலும் கூட கட்சிகள் அனைத்தையும் ஒரு நேர் கோட்டுக்குக் கொண்டு வர முடியவில்லை. இப்போதும் அனைத்து கட்சிகளும் ஓரிடத்தை நோக்கி வரவில்லை. ஆனால், ஒப்பீட்டு அடிப்படையில் பெரும்பாலான கட்சிகள் உடன்படிக்கையில் இணைந்திருக்கின்றன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி உடன் பாட்டுக்குள் வரவில்லையாயினும் கூட, தமிழ் அரசுக் கட்சிக்குள் ஒரு பகுதியினர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர். தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் தமிழ் மக்கள் அமைப்புகளும் தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது என்பது முற்றிலும் புதியது.

அதேவேளை, ஒப்பீட்டடிப்படையில் முன்னேற்றகரமானது அவசியமானது. முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் சூழல் என்பது வெறுமனே அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே உரித்தானதாக இருந்திருக்கவில்லை. அப்படியான அரசியல் நகர்வு பொருத்தமானதாகவும் இருந்திருக்கவில்லை.

அதற்கு மாறாக அரசியல் கட்சிகளும் அரசியல் விழிப்புள்ள சிவில் சமூக அமைப்புகளும் ஒன்றுபட்டு செயல்படுவதற்கான தேவையே மேலோங்கியிருந்தது.

அதாவது, ஓர் அரசியல் சமூகமென்னும் அடிப்படையில் அனைவரும் ஓரணியாக வேண்டியிருந்தது ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டியிருந்தது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் அதிக பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருந்தமையாலும் தொடர்ந்தும், நமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வந்த நிலையிலும் அவர்களால் குறிப்பாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் ஓர் அரசியல் சமூகத்தின் அங்கமாக சிந்திக்க முடிந்திருக்கவில்லை. ஒரு தேசமாக தமிழ் மக்கள் பெரும் வீழ்ச்சியை சந்தித்த போது ஓர் அரசியல் சமூகமாக திரள வேண்டியதே முதலாவதும் அடிப்படையானதுமான நகர்வாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அது நிகழவில்லை.

ஏனெனில், அரசியல் என்பது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு சண்டை. எவ்வாறான அரசியல் நகர்வுகளை மேற்கொண்ட போதிலும் இறுதியில் குறித்த நகர்வால் எதை அடைந்தோம் என்னும் கேள்வியே எஞ்சியிருக்கும். அந்தக் கேள்விக்கான பதிலை காண்பிப்பதில் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் பின்னடைவுகளை சந்தித்தவாறே நகர்கின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் ஜனாதிபதித் தேர்தலை ஒரு முதல் இலக்காகக் கொண்டு பெரும்பாலான கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளால் ஒழுங்கமைக்கப் பட்டிருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஓர் அரசியல் சமூகமென்னும் வகையில் ஒரு புரிந்துணர்வில் கலந்திருக்கின்றனர்.

இது ஓர் ஆரம்ப நகர்வு மட்டுமே. அடுத்த கட்டமாக சின்னம் மற்றும் வேட்பாளர் தொடர்பிலும் விரைந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். இது ஒரு முன்னுதாரணமான முயற்சி இதனை அத்திபாரமாகக் கொண்டு தமிழ் மக்களுக்கான ஜனநாயக அரசியலை செழுமைப்படுத்த வேண்டும்.

# எங்களிடம் ஒற்றுமையில்லையென கூறுவோருக்கு பலமான செய்தியைக் கூறியுள்ளோம் என்கின்றார் சுரேஷ்

எங்களிடம் ஒற்றுமை இல்லை என கூறுபவர்களுக்கு பலமான செய்தியை கூறியுள்ளோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் மற்றும் தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை தந்தை செல்வா கலையரங்கில் கைச்சாத்திடப்பட்ட பின்னர் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



எங்களிடம் ஒற்றுமை இல்லை என கூறுபவர்களுக்கு பலமான செய்தியை கூறியுள்ளோம் இனி எமது கட்டமைப்புடன் தான் பேசவேண்டும் அடுத்த கட்ட அரசியல் நகர்வாக இருக்கும் இந்தக் கட்டமைப்பை உருவாக்கக் கூடாது என்று பலர் முயற்சிகள் எடுத்தார்கள் எங்களுக்குள்ளேயும் பலர் சவால் விட்டார்கள் எதிராக பிரச்சாரம் செய்வோம் என்றார்கள் எனினும் நாம் ஒன்றிணைந்து கையெழுத்திட்டுள்ளோம் இனியும் இதைக் குழப்புவதற்கு பலர் இருக்கின்றார்கள்.

பல சிக்கல்களும் உருவாகும் இவை அனைத்தையும் எதிர்த்து போராடித் தான் முன்னேறிச் செல்ல வேண்டும். ஏன் பொது வேட்பாளர் தேவை என்பதற்கு பல காரணங்கள் உண்டு யுத்தத்திற்கு பிற்பாடு அரசாங்கம் எங்களைக் அரைத்து கலந்துரையாடுவார்கள் ஆனால் எதுவும் நடக்காது இப்போது நாங்கள் ஒரு நிலையில் தோற்வித்திருக்கின்றோம் நீங்கள் யாராவது பேசவிரும்பினால் வரலாம் நாங்கள் கூறவேண்டிய அவசியமில்லை.

நாங்கள் இப்போது தமிழ்த்தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகள் சிவில் அமைப்புக்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு செய்தியைச் செல்லுகின்றோம் யாராக இருந்தாலும் எம்மிடம் பேச வேண்டியிருந்தால் எங்களை நோக்கி வருவார்கள்.

நாங்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்த காலத்திலேயே தென் பகுதியில் ஒரு அச்சநிலை ஏற்பட்டது இவர்கள் ஒன்றாக போகின்றார்கள் என்று இந்தக் காலத்தில் முக்கியமான ஜனாதிபதி வேட்பாளர்கள் எங்களைத் தேடி வீடு வீடாக வந்தார்கள் கடந்த காலத்தில் கொழும்பிலே யாருடனே பேசி முடிவுகளை அறிவிப்பார்கள் ஆனால் இன்று தேடி வருகின்றார்கள் என்றால் இவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு பொது வேட்பளரை நிறுத்தப் போகின்றார்கள் அதற்கு முன்பாக இவர்களுடன் பேசி ஆதரவைபெறவேண்டும் என்று தான் வந்தார்கள். ஆகவே அவர்கள் எங்களைத் தேடி வரவேண்டும் என்ற நிலையை உருவாக்கியுள்ளோம். ஏனி தனிப்பட்ட எவரையும் சந்தித்துப் பேசுவதில்லை. தற்போது தமிழ்த்தேசியத்துடன் இணைந்து செயற்படுகின்றவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்கள்.

இனிமேல் இவர்களுடன் பேசித் தான் முடிவுகள் எடுக்க வேண்டும் என்பதை உருவாக்கியுள்ளோம். ஆகவே இது வரை காலமும் ஒற்றுமை இல்லை எனக்கூறியவர்களுக்கு மிகக் காத்திரமான பதிலை வழங்கியுள்ளோம்.

இந்தக் கட்டமைப்புக்குள் வராத ஏனைய கட்சிகள் குறிப்பாக தமிழரசுக் கட்சியும் இதற்குள் வரவேண்டும் இதன் நோக்கத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

பொது வேட்பாளர் விடையம் என்பது எமது அடுத்த கட்ட அரசியல் நகர்வை நோக்கி நகரவுள்ளது இதில் காத்திரமான வெற்றியைப் பெறுவேம் என்றால் குறிப்பாக வடக்கு கிழக்கு வாழ் மக்கள் பெருவாரியாக வாக்களிப்பார்கள் என்றால் அந்தச் செய்தி சிங்களத்தரப்பு இராஜதந்திரத் தரப்பு சர்வதேச தரப்பு பலமான செய்தியைச் செல்லும் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரே குரலில் பேசுகின்றார்கள் அந்தக் குரலை செவி சாய்க்க வேண்டும் என்பது எல்லோருக்கும் ஏற்படும் என்றார்.

மாதம் இருமுறை வெளியாகும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை
09 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்
Math & Physics Tutoring
(For High School Students)

Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions, Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை
Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# முன்னணியின் 2 எம்.பிகளுக்கும் 6 கோடி ரூபா ஒதுக்கீடா? லஞ்சமா?

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அபிவிருத்தி நிதியாக சுமார் 6 கோடி ரூபாவுக்கான ஒதுக்கீடு யாழ். மாவட்ட செயலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட அபிவிருத்தி நிதியாக சுமார் 6 கோடி ரூபாவுக்கான ஒதுக்கீடு யாழ். மாவட்ட செயலகத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை தன் வசம் வைத்துக் கொள்ளும் நோக்கில் குறித்த அபிவிருத்தி நிதி ஒதுக்கப்படுவதாக குற்றச் சாட்டுகள் எழுந்த நிலையில் தற்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான ஒதுக்கீடு கிடைக்க பெற்றுள்ளது.



ஏற்கனவே யாழ் தேர்தல் தொகுதிக்காக யாழ் மாவட்ட செயலகத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கு சுமார் 4 கோடி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரனுக்கு சுமார் 2 கோடி மற்றும் வன்னி தேர்தல் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதனுக்கு சுமார் 2 கோடி ரூபாய் என ஏற்கனவே ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் யாழ் மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தமக்கு ஏன் ஜனாதிபதியின் விசேட அபிவிருத்தி நிதி ஒதுக்கவில்லை என ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்நிலையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திறகு சுமார் 4 கோடி 60 இலட்சம் மற்றும் செல்வராஜா கஜேந்திரனுக்கு சுமார் 2 கோடிக்கான அனுமதிகள் யாழ் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் சேர்த்து பாராளுமன்ற உறுப்பினரான எம் ஏ சுமந்திரனுக்கு சுமார் 4 கோடி ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றுள்ளது

# ஆதரிக்கச் சொன்னவர்களின் பதில் என்ன?

முன்னைநாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இவ்வாறு கூறியிருக்கின்றார். அதாவது, தமிழ் மக்களுக்கு இராணுவத்தின் மீது கோபமில்லை. அவர்களுக்கு கோபம் இருந்திருந்தால் அவர்கள் எனக்கு வாக்களித்திருக்க மாட்டார்கள். 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது சரத் பொன்சேகாவை ஆதரிக்குமாறு இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரசாரங்களை முன்னெடுத்திருந்தது.

இலங்கை தமிழ் அரசு கட்சி, ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ் ஆகிய கட்சிகள் அனைத்தும் பொன்சேகா ஆதரவு பிரசாரங்களை முன்னெடுத்திருந்தன ஆனால் அதே கட்சிகள் அந்த ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் இராணுவத்தின் பிரசன்னத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்று பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன. எதற்காக பொன்சேகாவை ஆதரித்தார்கள் கேட்டால் மகிந்த எதிர்ப்பு என்று பதில் வரும் அல்லது தமிழ் மக்கள் அப்படித் தான் சிந்தித்தார்கள் என்றும் பதில் சொல்லக்கூடும். ஆனால், ஓர் அரசியல் தலைமைக்கு தான் என்ன செய்கிறேன் ஏன் செய்கிறேன் என்னும் புரிதல் இருக்க வேண்டும்.

அவ்வாறில்லாது விட்டால் அவர்களால் ஒரு தலைமையாக தங்களை முன்னிறுத்த முடியாது. 2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டுமென்னும் உரையாடல்கள் நடைபெற்று வரும் நிலையில், அதனை எதிர்கொள்வதில் உறுதியான நிலைப்பாட்டை இதவரையில் தமிழ் கட்சிகள் காண்பிக்கவில்லை. தொடர்ந்தும் தளம்பலான அணுகுமுறையையே முன்னெடுத்து வருகின்றனர். சில கட்சிகள் கொள்கை அடிப்படையில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாகக் கூறினாலும் கூட, அதற்கான முயற்சிகளை இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

ஒருபுறம், தமிழ் சிவில் சமூக அமைப்புகளின் முயற்சியை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு மறுபுறம் தென்னிலங்கை வேட்பாளர்களுடன் உறவாடுவதிலும் தீவிரம் காண்பித்து வருகின்றனர். இது அவர்களின் தளம்பல் நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் சரத் பொன்சேகாவின் இவ்வாறானதொரு கருத்து கவனத்தைப் பெறுகின்றது. 2010இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தூரநோக்குடன் விடயத்தை கையாண்டதா என்னும் கேள்விக்கு பொறுப்புக்கூறும் நிலையில் அன்று முடிவெடுத்தவர்கள் இருக்கின்றனரா?

மக்களுக்கு பொறுப்புக்கூறும் அடிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகள் என்போர் செயல்படுவதில்லை. இன்றுவரையில் இதுதான் தொடர் கதை. போருக்கு பின்னரான மூன்று தேர்தல்களிலும் தென்னிலங்கை வேட்பாளர்களை நோக்கி விரல் நீட்டிவிட்டு, அடுத்த பாராளுமன்றத் தேர்தல்களில் அவர்களை விமர்சித்து எதிர்த்து பிரசாரங்களை செய்யும் சித்துவிளையாட்டு அரசியலையே தமிழ்த் தேசிய கட்சிகள் இதுவரையில் முன்னெடுத்து வந்திருக்கின்றனர்.

இதனால் தமிழ் மக்கள் நன்மையை பெற்றிருந்தால் அது வேறு விடயம். ஒன்று நன்மையை தரவில்லை, அதேவேளை, தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தை கொடுக்கிறது என்றால் அவ்வாறான செயல்பாடுகளை மீண்டும் செய்யுமாறு எந்த அடிப்படையில் கோர முடியும்? அதற்கான தார்மீக தகுதி தமிழ்த் தேசிய கட்சிகள் என் போருக்கு இருக்கின்றதா?

# தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கை யாழ்ப்பாணத்தில் கைச்சாத்து!









ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று 22 யூலை 2024 திங்கட் கிழமை கைச்சாத்திடபட்டது. தமிழ் சிவில் சமூகத்துக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் இந்த உடன்படிக்கை யாழ்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் கைச்சாத்திடப்பட்டது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளனர். இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த்து.

இந்நிலையில் இரு தரப்பினர்களுக்கு இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த உடன்படிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தான் ஆகியோரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், சட்டத்தரணி ந.ஸ்ரீகாந்தா உள்ளிட்ட அரசியல்வாதிகளும், அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம், யதீந்திரா போன்ற சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கையொப்பமிட்டனர்.

இது இவ்றிருக்க ஜனாதிபதி ரணிலை மறைமுகமாக ஆதரிக்கும் விக்கினேஸ்வரன் ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தலை பிற்போடுவது முழு நாட்டிற்கும் நன்மை பயக்கும். அதிலும் குறிப்பாக தமிழர்களுக்கு நன்மையே. இந்த ஜனாதிபதி தேர்தலை பொறுத்த வரைக்கும் வேட்பாளர் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது. அதனால் அவர்கள் சிறுபான்மையின மக்களின் வாக்குகளை பெற முனைப்பு காட்டுவார்கள்.

அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் எவரும் 50 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறாத நிலைமை ஏற்படும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகும். ஏற்கனேவே நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் காணப்படுகிறது. அந் நிலையில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லாது போனால் நாடும் மிக மோசமான பொருளாதார பின்னடைவுகளை சந்திக்க நேரிடும்.

அத்துடன், தேர்தலுக்காக பெருமளவான நிதிகள் செலவழிக்கப்பட வேண்டிய நிலைமையும் ஏற்படும். அதுவும் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும். எனவே, அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து ஒரு வருட காலத்திற்கு ஜனாதிபதி தேர்தலை பிற்போட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து ஜோ பைடன் விலகல்



**-உதயன் பிள்ளை -**

அடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான போட்டியில் இருந்து விலகுவதாக, 81 வயதான தற்போதைய ஜனாதிபதி Joe Biden அறிவித்துள்ளார். கட்சியினதும், நாட்டினதும் நலனைக் கருத்திற் கொண்டு, ஜனநாயகக் கட்சியின் சார்பாக, 2ஆம் தவணைக்கான ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் இருந்து விலகுவதாக Joe Biden அறிவித்துள்ளார்.

Joe Biden அவர்களின் உடல் நிலை, முதுமை, மறதி, நிலைகுலைந்த தடுமாற்றம் என்பன, மக்கள் மத்தியில் அவரது செல்வாக்கை வெகுவாகப் பாதித்த நிலையில், அவர் தொடர்பான கரிசனைகள் ஜனநாயகக் கட்சியின் பல்வேறு நிலைகளில் இருந்து, அவருக்கான எதிர்ப்பலைகளாக வெளிப்பட்டன.

June 27 ஆம் திகதி இடம் பெற்ற, இரு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் இடையிலான முதலாவது விவாதத்தில், Joe Biden இன் இயலாமையும், குழப்பமும் ஐயமின்றி வெளிப்பட்டது. மேலும், ஜீலை 11ஆம் திகதி, உலகத் தலைவர்கள் கலந்து கொண்ட NATO மகாநாட்டில், Ukraine ஜனாதிபதியின் பெயரைத் தவறாக Vladimir Putin என்று Biden குறிப்பிட்டமை, மேலும் அவரது நிதானமற்ற தன்மையை அம்பலப்படுத்தியது.

இந்நிலையில், July 13 ஆம் திகதி, குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர், முன்னாள் ஜனாதிபதி Donald Trump துப்பாக்கிதாரி ஒருவரால் சுடப்பட்டு மயிரிழையில் உயிர் பிழைத்தமை, அவரது செல்வாக்கை மேலும் அதிகரித்தது. அத்துடன் Joe Biden மீதான மக்களினதும், ஊடகங்களினதும் கவனம் திசை திருப்பப்பட்டது.

இந்நிலையிலேயே, Joe Biden தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளார். எனினும், தற்போதைய ஜனாதிபதிப் பதவிக் காலம் January 20 ஆம் திகதி முடியும் வரை, அவர் தனது பதவியைத் தொடர்வார்.

தனக்குப் பதிலாக ஜனநாயக கட்சி சார்பாக, ஜனாதிபதிப் பதவிக்கான போட்டியாளராக, அமெரிக்காவின் தற்போதைய உப ஜனாதிபதி Kamala (Devi) Harris ஐ அவர் பரிந்துரை செய்துள்ளார். எனினும், மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள குடியரசுக் கட்சி சார்பான வேட்பாளரான, முன்னாள் ஜனாதிபதி Donald Trump ஐ வெற்றி கொள்வதற்கான பலம் மிக்க போட்டியாளராக Kamala Harris இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அழுத்தம் காரணமாக Biden எடுத்துள்ள இம்முடிவு, மிகவும் தாமதமாக வெளிப்பட்டுள்ள போதிலும், காலத்தின் கட்டாயம் மற்றும் தேவை என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், JoeBiden மிகச்சிறந்த ஆளுமை மிக்க, அத்தோடு நன்மதிப்புப் பெற்ற அரசியல்வாதியாகக் கடந்த பல தசாப்தங்களாக அமெரிக்க அரசியலில் தாக்கம் செலுத்திய ஒருவர். ஆனால், முதுமையும், நிதானமிழப்பும் அவரை மீளவும் ஜனாதிபதிப் பதவிக்குத் தகுதி அற்றவர் ஆக்கியுள்ளது.

குறிப்பாக, உலக வல்லரசான அமெரிக்கா, சமகாலத்தில் பல சவால்களை எதிர் கொண்டுள்ளது. சீனா, ரஷ்யா போன்ற நாடுகளிடம் இருந்து எழுகின்ற சவால்களையும், பொருளாதாரம், பாதுகாப்பு, தொழில்நுட்பம், விண்வெளி சார்ந்த துறைகளில் ஏற்பட்டுள்ள சவால்களையும், யுக்ரைன் - ரஷ்யா, இஸ்ரேல் - ஹமாஸ் உட்பட கொந்தளிப்பு நிலையில் உள்ள அரசியல்-படைத்துறை சார்ந்த சவால்களையும் எதிர் கொள்வதற்கு அமெரிக்க ஜனாதிபதியாக வரக் கூடியவர் மிகுந்த செல்வாக்கு, சிறந்த தலைமைத்துவம், உறுதி, நன்மதிப்பு ஆகிய பண்புகளைக் கொண்ட ஒருவராக இருக்க வேண்டியது அவசியம்.

இந்நிலையில், குடியரசுக்கட்சி வேட்பாளர் Donald Trump பல்வேறு குற்றாச்சாட்டுக்களையும், சர்ச்சைகளையும் எதிர் கொண்டுள்ள போதிலும், எதிர் தரப்பு வேட்பாளரின் பலவீனமான நிலை, மற்றும் பொருளாதார ரீதியாக (உலக அளவிலும் கூட) ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் அழுத்த நிலை என்பன, Trumpக்கான வெற்றி வாய்ப்பை அதிகரித்துள்ளது.

ஆகவே, உப ஜனாதிபதி Kamala Harris ஒரு சிறப்பான போட்டியாளராக இருக்க மாட்டார் என்பது கணிப்பு. மேலும், மீதமுள்ள குறுகிய காலத்துக்குள் சம்பிரதாய நடைமுறைகளின் பிரகாரம், புதிய வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்வதும் சாத்தியமற்றது.

எனினும், சிறப்பு நடைமுறைகளைப் பின்பற்றி, பலம் வாய்ந்த, செல்வாக்கு மிக்க ஒருவரைக் களத்தில் இறக்குவது மட்டுமே ஒரு சிறந்த தெரிவாக இருக்க முடியும்

இவ்வேளையில் மூன்றாம் தவணைக்காக, முன்னாள் ஜனாதிபதி Barack Obama ஜனநாயக் கட்சி சார்பாக களமிறக்கப்படலாம் என்ற கருத்தாடல்கள் சமூக வலைத்தளங்களில் உலவுகின்ற போதிலும், 1951 ஆம் ஆண்டி, 22nd Amemnment எனப்படும் புதுப்பிக்கப்பட்ட அரசியல் சாசனத்தின் பிரகாரம் தற்போது அது சாத்தியமில்லை. அதன் பிரகாரம், தற்போது (22ம் பக்கம் பார்க்க)


# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# யாழ்ப்பாணத்தில் தேர்தல் சுவரொட்டிகள்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

ஜனாதிபதித் தேர்தலையொட்டி வடக்கில் கடந்த சில வாரங்களாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன. வழமையாக யாழ்ப்பாணத்தின் சுவர்களை கேவிபி சுவரொட்டிகளே நிரப்புவதுண்டு.

இம் முறை ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு, ரணில் விக்கிரமசிங்க ஆவிக்குரிய சபைகள் கூறுவது போல நற்செய்தி வருகிறது என்ற பொருள் பட ஒரு பல வண்ண சுவரொட்டியை நாடு முழுவதும் ஒட்டினார். பன்னாட்டு நாணய நிதியத்தின் அடுத்த கட்ட உதவிகள் கிடைக்கப் போவதை முன்னிட்டு அதை தன்னுடைய ஆட்சிக் காலத்தில் சாதனையாக கருதி அவ்வாறு ஒரு சுவரொட்டியை அவர் வெளியிட்டார். அந்த சுவரொட்டிக்கு அடுத்தபடியாக ரணில் தான் என்ற பொருள்பட ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டது. அந்த இரண்டு சுவரொட்டிகளும் ஜனாதிபதி தேர்தலை முன்னோக்கி ஒட்டப்பட்டவை.




அதற்குப் பின் தென்னிலங்கையில் தன்னெழுச்சி போராட்டங்களில் ஈடுபட்ட அமைப்புகளுக்கும் கட்சிகளுக்கும் இடையிலான கூட்டு ஒரு சுவரொட்டி போட்டது. அதில் தன்னெழுச்சி போராட்டங்களை முன்னெடுத்த மூவருடைய படங்களைப் போட்டு நாங்கள் ரெடி என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

இதற்கும் சிறிது காலம் செல்ல ஜேவிபி அண்மை நாட்களாக ஒரு பெரிய பலவண்ண சுவரொட்டியை ஒட்டி வருகின்றது.அதில் அனுரகுமாரவின் பெரிய முகம் அச்சடிக்கப்பட்டுள்ளது. எங்கள் தோழர் அனுர என்றும் எழுதப்பட்டுள்ளது.

அதன் பின் அதாவது சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஒரு சுவரொட்டி. ஒட்டியது யார் என்று தெரியாது. அது ஒரு அனாமதேயச் சுவரொட்டி. அதில் வெள்ளை பேப்பரில் சிவப்பு மையால் தேசமே பயப்படாதே என்று எழுதப்பட்டுள்ளது. அதை யார் ஒட்டியது என்று தெரியாது. இனி வரும் நாட்களில் தெரிய வரலாம். முதலில் புதிர் போல ஒரு வசனத்தை போட்டு சுவரொட்டி வரும். பின்னர் அதற்கு விளக்கம் வரும். சில கிழமைகளுக்கு முன் ரணில் விக்கிரமசிங்க இதோ நற்செய்தி வருகிறது என்று ஒட்டியதும் அப்படித் தான்.

இவ்வாறாக தமிழ் பகுதிகளில் தென்னிலங்கைக் கட்சிகள் சுவரொட்டிகளை ஒட்டத் தொடங்கி விட்டன. ஆனால் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன!

தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்காக முயற்சி செய்யும் மக்கள் அமைப்பும் தமிழ்த் தேசிய கட்சிகள் ஏழும் இணைந்து ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஏற்கனவே வந்து விட்டன.

கடந்த மாதம் 29ஆம் தேதி வவுனியாவில் நடந்த ஒரு சந்திப்பில் அந்த உடன்பாடு எட்டப்பட்டது. அன்றைக்கே அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டு இருக்கலாம். ஆனால் சில கட்சிகள் அந்த உடன்படிக்கை கைசாத்திடும் நிகழ்வை பெருமெடுப்பிலான ஒரு நிகழ்வாக ஒழுங்குபடுத்த வேண்டும் என்று எதிர்பார்த்தன.

எனினும், அதனை முதலில் ஊடகவியலாளர்களுடன் ஒப்பீட்டளவில் கைக்கடக்கமான ஒரு நிகழ்வாகச் செய்வது என்று பின்னர் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி கடந்த ஆறாம் திகதி அந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. ஆனால் தமிழ் அரசியலில் மூத்த தலைவராகிய சம்பந்தரின் மறைவை யொட்டி அந்த நிகழ்வை ஒத்தி வைக்குமாறு கட்சிகள் கேட்டன. அவ்வாறு ஒத்தி வைக்கப்பட்ட அந்த வைபவம் வரும் 22ஆம் தேதி திங்கட்கிழமை இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் தந்தை செல்வா கலையரங்கில் அந்த நிகழ்வு இடம் பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பொது வேட்பாளரை நிறுத்துவதற்குரிய நகர்வுகள் கட்டமைப்பு சார்ந்து முன்னேற தொடங்கியுள்ளன என்று தெரிகிறது. கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச்சபையும் இணைந்து உருவாக்கும் கட்டமைப்பானது அடுத்த அடுத்த கட்ட வளர்ச்சிக்கு போகும் பொழுது, பொது வேட்பாளரை நோக்கித் தேர்தல் களம் மேலும் சூடாகும் என்று எதிர்பார்க்கலாம்.

ஒரு பொது வேட்பாளர் என்ற விடயம் எப்பொழுதோ மக்கள் மத்தியில் பேசு பொருள் ஆகி விட்டது. அதற்கு ஆதரவாக ஒரு பகுதி ஊடகங்கள் எப்பொழுதோ இயங்கத் தொடங்கி விட்டன. அண்மையில் மாவை சேனாதிராஜா ஒரு நேர்காணலில் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். அந்த நேர்காணலில் அவர் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டுகிறார். அதன்படி பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது, ஒரு புதிய மக்கள் ஆணையை பெறுவதற்காக என்பதை விடவும், மக்களை ஒன்று திரட்டுவதற்கானது அன்று மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

இப்பொழுது தமிழரசு கட்சியின் உத்தியோகபூர்வ தலைவர் அவர்தான். அதனால் அவருடைய கருத்துக்களுக்கு முக்கியத்துவம் உண்டு. தமிழ் மக்களை ஒன்றாகத் திரட்ட வேண்டும் என்ற விடயத்தை தமிழ்ப் பரப்பில் உள்ள பெரிய கட்சியின் தலைவர் வெளிப்படையாகப் பேசுகிறார். அந்த நோக்கத்துக்காகத் தான் பொது வேட்பாளர் என்றும் அழுத்திக் கூறுகிறார். ஏற்கனவே சிறீதரனும் அவருடைய அணியும் பொது வேட்பாளர் என்ற விடயத்தை பகிரங்கமாக ஆதரித்துக் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். எனவே தமிழரசுக் கட்சிக்குள் பொது வேட்பாளருக்கு ஆதரவான அணி படிப்படியாக பலம் பெற்று வருவது தெரிகின்றது.இது தமிழ்ப் பொது வேட்பாளருக்கு உரிய ஆதரவுத் தளத்தை மேலும் பலப்படுத்தும்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கான ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவது என்பது அதன் பிரயோக வடிவத்தில் தமிழ் மக்களை ஒரு பெரிய திரளாக ஐக்கியப்படுத்துவது தான். தமிழ் மக்கள் ஐக்கியப்படும் பொழுது சாதனைகளையும் சாகசங்களையும் செய்வார்கள். தமிழ் மக்கள் இப்பொழுது தம் பலம் எதுவென்று அறியாத மக்களாக சிதறிப் போய் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் மிக்க புவிசார் அமைவிடத்தில் அமைந்திருக்கும் ஒரு மக்கள் கூட்டம். எல்லா பேரரசுகளின் இழு விசைகளுக்குள்ளும் வரும் ஒரு மக்கள் கூட்டம். அதனால் தமிழ் மக்களைக் கையாள வேண்டிய தேவை உலகின் மூன்று பேரரசுகளுக்கும் உண்டு. அந்த அடிப்படையில் பார்த்தால், தமிழ் வாக்குகள் பொன்னானவை. கேந்திர முக்கியத்துவம் மிக்கவை. அவ்வாறு கேந்திர முக்கியத்துவம் மிக்க தமிழ் வாக்குகளை கடந்த 15 ஆண்டுகளாக ஜனாதிபதி தேர்தல்களின் போது வெற்றுக் காசோலையாக வீணாக்கி வந்த ஒரு அரசியல் போக்கை மாற்றி, அவற்றை அவற்றுக்குரிய முக்கியத்துவத்தோடு, ராஜதந்திரப் பெறுமதியோடு அரசியல் பெறுதியோடு ஒன்று திரட்டுவதே தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் இலக்கு ஆகும்.

இந்துப் புராணங்களில் வரும் அனுமாரைப் போல தமிழ் மக்களுக்குத் தங்கள் பலம் எதுவென்று தெரிய வில்லை. அனுமார் வாயுபுத்திரர் ஆவார். காற்றைப் போல அவருக்கு சக்தி அதிகம். ஆனால் தன் பலத்தை அவர் அறிவதில்லை. அப்பாவியாக சாதுவாக இருப்பார். ராமாயணத்தில் அவருக்கு அவருடைய பலத்தை உணர்த்தி நீ வாயுபுத்திரன் ஒரே மூச்சில் சமுத்திரத்தைக் கடப்பாய் என்று அவருக்கே அவருடைய பலத்தை உணர்த்தியது ஜாம்பவான் என்ற வானரத் தளபதி ஆகும். தன் பலம் எதுவென்று தெரிந்ததும் அனுமார் விஸ்வரூபம் எடுத்தார். ஒரே மூச்சில் சமுத்திரத்தைக் கடந்தார். சீதையைக் கண்டார். எனவே அனுமாரைப் போல தமிழ் மக்களுக்கும் அவர்களின் பலம் எதுவென்று தெரிய வில்லை. ஒரு காலம் அவர்கள் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்த மக்கள். முழு உலகத்தையும் திரும்பி பார்க்க வைக்கும் ஒரு போராட்டத்தை நடத்திக் காட்டிய மக்கள். ஆனால் இன்று சிதறிப் போய் இருக்கிறார்கள். அவிழ்த்து விட்ட பாக்கு மூட்டை போல அவர்கள் சிதறிப்போய் இருக்கிறார்கள். அவர்களை திரும்பவும் கூட்டிக் கட்டினால், அவர்கள் மீண்டும் அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

எனவே தமிழ் மக்களுக்கு அவர்களுடைய பலம் எது என்பதை, அவர்களுடைய கேந்திர முக்கியத்துவம் எது என்பதனை, எடுத்துக் கூறவல்ல தலைமைகள் மேல் எழ வேண்டும். அவ்வாறு தமிழ் மக்கள் தங்கள் பலம் எது என்பதை கண்டு பிடிக்கும் விதத்தில் அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டும்.அப்படி ஒரு முடிவுதான் தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு.

இந்த அடிப்படையில் தமிழ்மக்கள் தமது பொன்னான வாக்குகளை அவற்றுக்குரிய கேந்திர முக்கியத்துவத்தோடு உபயோகிப்பார்களாக இருந்தால் அவர்கள் மீண்டும் தங்கள் ஒன்று திரண்ட பலத்தோடு எழுவார்கள்.

இது வரையிலும் 7 தமிழ் தேசிய கட்சிகளே தமிழ் மக்கள் பொதுச்சபையுடன் உடன்பாட்டுக்கு வர இருக்கின்றன. எதிர்காலத்தில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கொண்ட ஏனைய கட்சிகளும் இப்பொழுதுக் கட்டமைப்புக்குள் இணையக் கூடும். தமிழ் மக்கள் ஒன்றாகத் திரளும் பொழுது கட்சிகள் மக்களைப் பிரதிபலிக்கும்.

இப்பொழுது தமிழ் மக்கள் பொதுச் சபையில் இருப்பவர்களில் பலர் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணிகளில் ஈடுபட்டவர்கள் தான். அதில் அவ்வப்போது சிறிய சிறிய வெற்றிகளைப் பெற்றிருக்கிறார்கள். எனினும் எல்லா கட்சிகளையும் ஒரு கட்டமைப்பாக கூட்டிக் கட்டுவதில் அவர்கள் தொடர்ச்சியாகத் தோல்வியடைந்து வந்திருக்கிறார்கள். இந்தத் தோல்வி கரமான அனுபவங்களின் பின்னணியில், இதற்கு முன் உருவாக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவை போன்ற கட்டமைப்புகளில் இருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில், உருவாக்கப்பட்டதே தமிழ் மக்கள் பொதுச்சபையாகும்.

எனவே கடந்த 15 ஆண்டு கால அனுபவங்களிலிருந்தும் கற்றுக் கொண்ட தமிழர்கள் மீண்டும் ஒரு பலமான திரட்சியாக மாறுவதற்குரிய வாய்ப்புகளை ஜனாதிபதித் தேர்தல் களம் திறந்து வைத்திருக்கின்றது.

தென்னிலங்கைக் கட்சிகள் தமிழ் மக்களுடைய சுவர்களில் தங்களுடைய விலை கூடிய பல வண்ணச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ் மக்களின் மனங்களில் சிறு பொறியாகச் சுடரத் தொடங்கியுள்ள ஒன்றுபடுவோம் என்ற பெரு விருப்பை ஓர் அரசியல் ஆக்க சக்தியாக தமிழ் பொது வேட்பாளர் மாற்றுவாரா?

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஆகஸ்ட் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் – உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை – நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும். புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் – மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக – எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை – மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

12 யூலை 2024 – 19 யூலை 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விநாசித்தம்பி தங்கம்மா

புங்குடுதீவு 10ம்வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி விநாசித்தம்பி தங்கம்மா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி ஞானசேகர்

சுருவிலைப் பிறப்பிடமாகவும் கனடா றொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 09 யூலை 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரின் குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி ஞானசேகர் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## புதிய அமெரிக்க ஜனாதிபதி பெண் தான் அஸ்பராகஸ் சோதிடர் கணிப்பு!

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பு தமக்கு அதிகம் என நம்பும் டொனால்டு ட்ரம்புக்கு மிச்செல் ஒபாமா அதிர்ச்சி வைத்தியம்



அளிப்பார் என அஸ்பாரகஸ் ஜோதிடர் கணித்துள்ளார். அதாவது அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக ஒரு பெண் பொறுப்பேற்பார் என்றும் அது கமலா ஹாரிஸ் அல்ல மாறாக மிச்செல் ஒபாமா என அஸ்பாரகஸ் ஜோதிடர் என அறியப்படும் Jemima Packington கணித்துள்ளார்.

நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் தேர்தலில், டொனால்டு ட்ரம்ப் அல்லது கமலா ஹாரிஸ் என இருவருக்கும் வாய்ப்பில்லை என்றே குறிப்பிட்டுள்ளார். யாரும் எதிர்பாராமல் மிச்செல் ஒபாமா களத்திற்கு வருவார், டொனால்டு ட்ரம்பிடம் இருந்து வெற்றி வாய்ப்பை அவர் தட்டிச் செல்வார் என்றும் Jemima Packington தெரிவித்துள்ளார்.

ஆகஸ்டு மாதம் நடக்கவிருக்கும் கட்சி மாநாட்டில், அதிரடி திருப்பமாக மிச்செல் ஒபாமா ஜனாதிபதி வேட்பாளராக உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்படுவார் என்றும் அவர் கணித்துள்ளார்.

இதனால், டொனால்டு ட்ரம்பின் ஜனாதிபதி கனவு அத்துடன் முடிவுக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். டீசநஓவை, ராணியாரின் மறைவு மட்டுமின்றி, ஜோ பைடன் போட்டியில் இருந்து விலகும் முன்னரே, அமெரிக்காவில் பெண் ஒருவர் ஜனாதிபதியாக பொறுப்புக்கு வருவார் என கடந்த வாரமே அறிவித்தவர் Jemima Packington.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் களம் காணவிருக்கும் தற்போதைய துணை ஜனாதிபதியான கமலா ஹாரிஸ் தேர்தல் பரப்புரைக்காக நிதி திரட்டுவதில் வரலாறு படைத்துள்ளார். கடந்த 24 மணி நேரத்தில் மட்டும், பல ஆயிரக் கணக்கான நன்கொடையாளர்களிடம் இருந்து மொத்தம் 81 மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது இந்திய ரூபாய் மதிப்பில் சுமார் 677 கோடி என்றே கூறப்படுகிறது.


இதில் பெரும்பாலானவர்கள் முதல் முறையாக இந்தத் தேர்தலுக்காக நிதி அளித்துள்ளனர். மேலும், ஜனாதிபதி தேர்தலில் களம் காணும் எந்த ஒரு வேட்பாளரும் 24 மணி நேரத்தில் இந்த அளவுக்கு பெருந்தொகையை திரட்டியதில்லை என்றே தரவுகளின் அடிப்படையில் குறிப்பிடுகின்றனர்.

**மாதம் இருமுறை வெளியாகும்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**09 ஆகஸ்ட் 2024 வெள்ளிக்கிழமை**
**அச்சுப் பத்திரிகையாக**
அனைத்து தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் eelanadu.ca மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



09 யூலை 2024 செவ்வாய்க்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானசேகர் சரோஜினிதேவி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



09 யூலை 2024 செவ்வாய்க்கிழமை சுருவிலைப் பிறப்பிடமாகவும் றொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி ஞானசேகர் சரோஜினிதேவி அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரை நினைவு கூர்ந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



12 யூலை 2024 வெள்ளிக்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருக்கும் திரு சிவபாலன் வைத்தியநாதன் அவர்களுடைய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு சிவபாலன் வைத்தியநாதன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்ர் உணவு வழங்கி மகிழ்ந்தார்



17 யூலை 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் றெஜி என்று அன்பாக அழைக்கப்படும் திரு றெஜினோல் தவரட்ணம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றெஜினோல் தவரட்ணம் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்ர் உணவு வழங்கி மகிழ்ந்தார்



18 யூலை 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி பாஸ்கரன் தர்மினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் நிஜெஸ்சன் பாஸ்கரன் அவர்களது 19வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் நிஜெஸ்சன் தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



19 யூலை 2024 வெள்ளிக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த அமரத்துவமாது திருமதி பரமேஸ்வரி சிவசுப்பிரமணியம் அவர்களது பிறந்தநாள் நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



20 யூலை 2024 சனிக்கிழமை கனடாவாழ் துன்னாலை கரவை மக்கள் மன்றத்தின் 27வது ஆண்டு ஒன்றுகூடல் நிகழ்வு அன்பளிப்பாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்கள்




20 யூலை 2024 சனிக்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




17 யூலை 2024 புதன்கிழமை கனடாவில் வாழும் செல்வன் Micaiah நகுல் சிவசோதியின் 4வது பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக 21 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை செல்வன் Micaiah நகுல் சிவசோதி தனது பெற்றோர்கள் உறவுகளுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



24 யூலை 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சோமநாத் துர்க்கா தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜெரியான் சோமநாத்தின் 10வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வன் ஜெரியான் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



24 யூலை 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி றெனா மியானி தம்பதிகளுக்கு செல்வன் கேடன் அருண் பிறந்த 31ம்நாள் நன் நிகழ்வுக்காக இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்

AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON, L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarborough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
1.5% முதல் 2% வட்டி
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
Funeral Director
S. Christeen
416-258-6759

N.K.S DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

SR Reliance Auto Collision Inc.
Complete Auto Body Repairs & Painting
Rasan
Proprietor
Tel: 416-822-4272
Fax: 647-352-4272
Email: atsrasan@gmail.com
15 Granger Ave. Toronto, ON. M1K 3K9

747 AUTOPARTS
Need Auto Parts? Look No Further!
Markham Rd: 905-471-4447
Markham - Heritage Rd: 905-294-5773
Newmarket - Davis Rd: 905-836-7447
Scarborough - Lawrence Ave: 416-285-4447
Scarborough - Milliken Blvd: 416-335-7747
Ajax - Fuller Road: 905-686-4447
www.747autoparts.com

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா
சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

காப்புறுதி ஒன்றே!
Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • Super Visa Insurance • RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group · Assumption Life · Foresters · KABIS

# தமிழீழத்தின் மூத்த தேசப்பற்றாளர் தமிழேந்தல் ஈழவேந்தன் நினைவரங்கில்







முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின்
வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை

13வது ஆண்டாக நடாத்தும்

## ஊட்டும் கரங்கள்

# தமிழும் இசையும் இராப்போசன விருந்தும்





## இன்பத் தமிழ்ப் பேச்சு

சிறப்புச் சொற்பொழிவாளர், தமிழ் கூறும்
நல்லுலகின் தன்னிகரற்ற பேச்சாளர்,
சொல்லின் செல்வி, மொழி அரசி, , பேராசிரியை

## பர்வின் சுல்தானா

நட்சத்திரா இசைக்குழுவின் இசையில்

Zee தமிழ் சரிகமப புகழ்

## கோபாலகிருஷ்ணன்

கனேடிய தமிழ்ப் பாடகர்களுடன் இணைந்து வழங்கும்

## இன்னிசை மாலை

**யூலை 28, 2024**
ஞாயிற்றுக்கிழமை - 5:30PM

**METROPOLITAN CENTRE**
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

**அன்பளிப்பு**

| $150 VIP | $100 | 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர்க்கு மட்டும் $75 |
|---|---|---|

தொடர்புகளுக்கு-
ஈழநாடு பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. I
Call 416 NANTHA 1 - 416 626 8421

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd,
Scarborough, ON
416.757.9111

INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

வீடு வாங்க, விற்க அல்லது அது சம்பந்தமான
விடயங்கள் அறிய இலவச ஆலோசனைகளுக்கு
உங்கள் நண்பன் ஆனந் தர்மலிங்கம்
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
ANANTH Tharmalingam
Sales Representative
416.939.9525
Office: 416.287.2222

AJAX CREMATORIUM & VISITATION CENTRE
CALL: DHARMA, B.Com.
Licenced Funeral Pre-Planner
647-713-6049

TIMES IRON WORKS INC.
Fabricators & Erectors
Times Metals Sales

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

றொறன்றோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் கருங்கல் திருக்கோவில்

# சங்குஸ்தாபன மஹோற்ஸவம்

## அடிக்கல்நாட்டு விழா

**JULY 12, வெள்ளி முதல் JULY 28 ஞாயிறு வரை**



## விநாயகர் ப்ரம்மோற்ஸவ தினங்களில் தினமும்

**காலை 11:00 மணிமுதல் 1:00 மணிவரை**

ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் புதிய கருங்கல் ஆலயத்திற்குரிய சங்குஸ்தாபனத்தில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்குகொள்ளலாம்.



கருங்கல் திருக்கோவில் ஸ்தபதியார்
"சிற்பக்கலையரசன்" திரு. சரவணமுத்து ஜெயராஜா
"சிற்பக்கலாரத்தினம்" திரு. சக்திவிநாயகம்

குறிப்பிட்ட தினத்தில் அடியார்கள் பலர் வேலை-பாடசாலை காரணமாகக் குடும்பமாக குழந்தைகளுடன் சேர்ந்து சங்குஸ்தாபன வைபவத்தில் கலந்துகொள்ள முடியவில்லை என்பதாலும், வாழ்நாளில் கிடைக்கப்பெறாத அரிய சந்தர்ப்பத்தில் தமது திருக்கரத்தினால் ஆலயத்திற்கான சங்குகளை ஸ்தாபித்து இச்சிறந்த திருப்பணியில் இணைந்து கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கமைவாகவும் தொடர்ந்து 28.07.2024 ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறுகின்ற விநாயகர் மஹோத்ஸவ காலத்தில் தினமும் காலை 11:00 மணிமுதல் 1:00 மணிவரை அடியார்கள் சங்குஸ்தாபன வைபவத்தில் பங்குபற்றுவதற்குரிய ஏற்பாடுகள் ஆலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**அனைவரும் குடும்பசகிதமாக வருகை தந்து சங்குஸ்தாபன அடிக்கல்நாட்டு விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்**

**ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோற்ஸவ திருநாட்களில் நடைபெறும்**
**விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்**
**14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை**
**தினமும் காலை, மாலை சிறப்பாக நடைபெவுள்ளது.**



"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை.
றொறன்ரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

3025 Kennedy Rd, Unit 10,
Scarborough ON M1V1S3

1.416.291.8500
www.vinaayagar.com
vinaayagar

# அர்ஜுனாவும் இரும்பு மோதிரமும்

ஒரு கனேடிய நண்பர். அவர் ஒரு பொறியியலாளர். இரும்பு மோதிரம் ஒன்றை அணிந்திருந்தார். அதற்குப் பின்னால் உள்ள கதையைச் சொன்னார். கனடாவில், கியுபெக் பாலம் 1907ஆம் ஆண்டு மனிதத் தவறுகளால் நொறுங்கி விழுந்தது. அதில் 75 தொழிலாளர்கள் கொல்லப்பட்டார்கள். அப்படி ஒரு தவறு இனி மேலும் நடக்க கூடாது என்ற சங்கல்பத்தோடு பொறியியலாளர்களுக்கான சத்தியப் பிரமாணம் ஒன்றைக் குறித்துச் சிந்திக்கப்பட்டது.

டொரன்டோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பொறியியலாளர் Haultain 1922ஆம் ஆண்டு பொறியியலாளர்களுக்கான தொழில்சார் சத்தியப் பிரமாணத்தை அறிமுகப்படுத்தினார். 1925ஆம் ஆண்டு அவருடைய மேற்பார்வையின் கீழ் பொறியல் பட்டதாரிகள் இரும்பு மோதிரம் அணிந்து சத்தியபிரமாணம் செய்து கொண்டார்கள். முதலாவது தொகுதி இரும்பு மோதிரங்கள் உடைந்து விழுந்த கியுபெக் பாலத்தின் இரும்புத் தூண்களில் இருந்து தயாரிக்கப்பட்டன.

இது கனேடியப் பொறியியலாளர்களுக்கான பொறுப்புக்கூறல் சம்பந்தப்பட்ட ஒரு விடயம். மருத்துவர்களுக்கும் அவ்வாறு



உலகளாவிய ஹிப்போகிரடிஸ் ஒத் என்று அழைக்கப்படும் சத்தியப்பிரமாணம் உண்டு.

பொறுப்புக்கூறல் எனப்படுவது மருத்துவத் துறைக்கும் பொறியியல் துறைக்கும் மட்டுமல்ல எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும்.ஒரு சமூகப் பிராணியாக இருக்கும் மனிதர்கள் அனைவருக்கும் அது பொருந்தும். மருத்துவர் தவறு விட்டால் உயிர் போகும் உறுப்புகள் போகும். பொறியியலாளர் தவறு விட்டால் பாலம் இடிந்து விழும் அல்லது கட்டடம் இடிந்து விழும் உயிர் போகும் உறுப்புகள் போகும் சொத்துக்கள் போகும். ஆசிரியர் தவறு விட்டால் ஒரு தலைமுறையின் எதிர்காலம் நாசமாகும். தலைவர்கள் தவறு விட்டால் ஒரு நாடு அழிந்து போகும். எனவே மனிதத் தவறுகளுக்கு மனிதர்கள் பொறுப்புக் கூற வேண்டும்.

சமூகத்தின் மிகச் சிறிய அலகாகிய குடும்பத்துக்குள் குடும்ப அங்கத்தவர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். நிறுவனங்களுக்குள் கட்டமைப்பு சார்ந்து தொழில் தர்மம் சார்ந்து பதவி வழி சார்ந்து, பொறுப்புக்கூற வேண்டும். தலைவர்கள் மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும். ஆகக் குறைந்தது எல்லா மனிதர்களும் தங்களுடைய மனச் சாட்சிக்காவது பொறுப்புக் கூற வேண்டும்.

மருத்துவர் அர்ஜுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பை அதிகப்படுத்தியுள்ளார். மருத்துவத்துறை சார்ந்தவர்கள் சமூகத்துக்கு பொறுப்புக்கூற வேண்டிய நிர்ப்பந்தங்களை அவர் அதிகப்படுத்தியுள்ளார். அவர் எப்பொழுதும் நேரலையில் தோன்றினார். அப்பாவித்தனமாகவும் வெகுளித்தனமாகவும் தனக்குச் சரியெனப்பட்டதை நேரலையில் கூறினார். அவரிடம் உள்ள அப்பாவித்தனமும் தன்னைத் தற்காத்துக் கொள்ளாத துணிச்சலும் கலகக் குணமும் அவரை மக்களுக்கு நெருக்கமானவர் ஆக்கின. அதேசமயம் அந்த அப்பாவித்தனமும் அவசரமும் நிதானமின்மையும் பக்குவமின்மையும் ஊடகங்கள் முன் அவரை சிலசமயம் பலவீனமானவராகவும் காட்டின.

சுகாதாரத்துறை தொடர்பாக அவர் முன் வைக்கும் குற்றச்சாட்டுகளை வெவ்வேறு



ஊடகவியலாளர்கள் ஏற்கனவே முன் வைத்திருக்கிறார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த மு.தமிழ்ச்செல்வன் அது தொடர்பாக கட்டுரைகள் எழுதியிருந்தார். ஆனால் அர்ஜுனா இதில் எங்கே வேறுபடுகிறார் என்றால், அவர் அந்த சிஸ்டத்துக்குள் இருந்து கொண்டே அந்த சிஸ்டத்தைக் கேள்வி கேட்கின்றார் என்பது தான். அது தான் அவருக்கு கிடைத்த கவர்ச்சி.

அந்தக் கவர்ச்சியை அவர் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வாரா இல்லையா அவருடைய தனிப்பட்ட வாழ்க்கை எத்தகையது அவருடைய தனிப்பட்ட சுபாவம் எத்தகையது... போன்ற எல்லா விடயங்களுக்கும் அப்பால் அவர் எழுப்பியிருக்கும் கேள்விகளுக்கு துறைசார் உயர் அதிகாரிகள் பதில் கூறுவதே பொருத்தமானது. ஏனெனில் அர்ஜுனா மருத்துவத்துறை சார்ந்த பொறுப்புக் கூறல் தொடர்பில் விழிப்பை ஏற்படுத்தியிருக்கிறார். மருத்துவத்துறைக்கு அது தொடர்பில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தியிருக்கிறார்.

தமிழ்ச் சமூகத்தில் கிராமவாசிகள் அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகள் என்று அழைப்பார்கள். அங்கு மருந்தும் சிகிச்சையும் இலவசமாக தரப்படுகிறது என்று பொருள்.ஆனால் அவை மெய்யான பொருளில் தர்மாஸ்பத்திரிகள் அல்ல. அங்கே வேலை செய்யும் மருத்துவர்கள் உட்பட அனைவரும் சம்பளம் வாங்குகிறார்கள். அந்தச் சம்பளம் மக்கள் செலுத்தும் வரிப்பணத்தில் இருந்து திரட்டப்படுவது. அங்கு வழங்கப்படும் இலவச மருந்தும் சிகிச்சையும்கூட மக்களுடைய வரிப் பணம் தான். எனவே அங்கே யாரும் யாருக்கும் தானம் செய்யவில்லை. யாரும் யாரிடமும் தானம் பெறவும் இல்லை.

ஆனால் வாங்கும் சம்பளத்துக்கு மேலதிகமாக தமது தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்கள் அநேகர் உண்டு. தாம் பொறுப்பேற்ற நோயாளியை காப்பாற்றுவதற்காக ஊண் உறக்கமின்றி சேவை புரியும் மருத்துவர்கள் உண்டு. தனியார் மருத்துவமனைக்குப் போகக் கூடாது என்பதனை ஒரு தவம் போல கடைப்பிடிக்கும் மருத்துவர்கள் உண்டு. தனியார் மருத்துவத் துறைக்கு போனாலும் அங்கே நோயாளியின் நிதி நிலையைக் கருத்தில் எடுத்து காசு வாங்காத மருத்துவர்கள் உண்டு. வாங்கிய காசை உண்டியலில் சேகரித்து தானம் செய்யும் மருத்துவர்கள் உண்டு.

எனவே அர்ஜுனா முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் மருத்துவர்களுக்கும் பொருந்தாது. போர்க்காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. பெருந்தொற்றுநோய் காலத்தில் உயிரைக் கொடுத்து உழைத்த மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. இப்பொழுதும் தொழிலைத் தொண்டாகச் செய்யும் மருத்துவர்களுக்கு அது பொருந்தாது. அரச மருத்துவமனையை தர்மாஸ்திரியாக பார்க்கும் மக்கள் அங்கு மருத்துவர்கள் தாதியர்களும் தாங்கள் எதிர்பார்க்கும் அளவுக்கு தர்மமாக இல்லை எனும் பொழுது அதிருப்தி அடைகிறார்கள், கோபமடைகிறார்கள். குறிப்பாக தனியார் மருத்துவத்துறை மீதான விமர்சனங்கள் அந்தக் கோபத்தை அதிகப்படுத்துகின்றன. அந்தக் கோபங்களை கேள்விகளை அதிருப்தியை அர்ஜுனா குவிமயப்படுத்தினார். அதனால் தான் சாவகச்சேரியில் அத்தனை மக்கள் திரண்டார்கள்.சில நாட்களுக்கு முன் சம்பந்தரின் அஞ்சலி நிகழ்வில் திரண்டதை விட அதிக தொகையினர் ஒரே நேரத்தில் திரண்டார்கள்.

அர்ஜுனா எப்பொழுதும் நேரலையில் தோன்றினார் அது தான் அவருடைய பலம். பின்னர் அதுவே அவருக்கு பல வீனமாகவும் மாறியது. அரச மருத்துவமனைகளை தர்மாஸ்பத்திரிகளாக கருதும் ஒரு சமூகத்தின் மத்தியில் மருத்துவர்களுக்கு உயர்வான பவித்திரமான ஒரு இடம் உண்டு. பொதுவாக மருத்துவர்கள் அந்த பவித்திரமான ஸ்தானத்தை விட்டு வெளியே வர விரும்புவதில்லை. ஆனால் அர்ஜுனா வெளியே வந்தார். பல மாதங்களுக்கு முன் கண்டாவளையைச் சேர்ந்த ஒரு பெண் மருத்துவர் வெளியே வந்தார். இப்பொழுது முகநூலில் சில மருத்துவர்கள் அவ்வாறு வெளியே வருகிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் விதிவிலக்கு. பொதுவான மருத்துவர் குணம் என்பது தனக்குரிய பவித்திரமான ஸ்தானத்தைப் பேணுவது தான்.

ஆனால் அர்ஜுனா அப்படியல்ல. அவர் மருத்துவர்கள் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்ட பொதுவான பிம்பத்துக்கு வெளியே நிற்கிறார். நேரலை மூலம் அவர் சமூக வலைத்தளங்களில் கட்டியெழுப்பியிருக்கும் பிம்பமும் திடீர் வீக்கமாக இருக்கலாம். அவர் தன்னுடைய தனிப்பட்ட தவறுகளை பலவீனங்களை சிஸ்டத்தின் மீதான விமர்சனங்களாக மாற்றுவதில் வெற்றி கண்டு விட்டார் என்ற ஒரு விமர்சனமும் உண்டு.

எனினும், அவர் சார்ந்த சிஸ்டத்தின் மீது அவர் எழுப்பியிருக்கும் கேள்விகள் விசாரணைக்குரியவை. திணைக்களம் சார்ந்த உள்ளக விசாரணைகள் உண்மைகளை வெளியே கொண்டு வரலாம். அல்லது ஊடகத் துறையைச் சேர்ந்தவர்கள் அதை மணந்து கண்டு பிடிக்கலாம். அர்ஜுனா எழுப்பிய கேள்விகள் தொடர்பாக உண்மைகளை புலனாய்ந்து வெளியே கொண்டு வர வேண்டிய துறை சார் பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. அது ஊடகத்துறை சார்ந்த பொறுப்புக் கூறல்.

அதேசமயம் துறைசார் அரச உயர் அதிகாரிகள் அவர் எழுப்பிய கேள்விகள் தொடர்பாக மக்களுக்கு பதில் கூற வேண்டும். அதை விட முக்கியமாக அர்ஜுனா ஒரு பொறியைத் தட்டிப் போட்டதும் அது எப்படி சாவகச்சேரியில் தீயாகப் பரவியது என்பதற்குரிய சமூக உளவியலையும் தொகுத்து ஆய்வு செய்ய வேண்டும்.

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**– நிலாந்தன் –**



அர்ஜுனாவின் கலகம் வெற்றிடத்தில் இருந்து தோன்றவில்லை. அது ஏற்கனவே சமூக மட்டத்தில் பரவலாகக் காணப்பட்ட அதிருப்தி, கோபம், பயம், சந்தேகம் போன்றவற்றின் தொகுக்கப்பட்ட விளைவுதான். ஏற்கனவே பொதுப் புத்திக்குள் இருந்த பயங்களையும் கோபத்தையும் அதிருப்தியையும் அர்ஜுனா ஒருங்குவித்தார் என்பது தான் சரி.

அர்ஜுனாவின் விமர்சனங்கள் விவகாரம் ஆகிய பின் சில நாட்கள் கழித்து யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஒரு குறிப்பை முகநூலில் போட்டார்.அது போதனா வைத்தியசாலை மீதான விமர்சனங்களுக்குப் பதில் கூறும் நோக்கிலானது. ஆனால் அதற்கு கீழே வந்த கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால், 500க்கும் அதிகமான கருத்துக்களில் 90 விகிதத்துக்கும் அதிகமானவை மருத்துவத் துறைக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைப்பவை. அதில் ஒரு செய்தியுண்டு. பொதுசன மனோநிலை ஏன் அவ்வாறு அதிருப்தியோடும் கோபத்தோடும் காணப்படுகின்றது?

ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட ஒரு துறைசார்ந்த பொறுப்புக்கூறல் தொடர்பில் விழிப்பு அதிகரிப்பது நல்லது. ஒவ்வொருவரும் தொழில் சார்ந்தும் அறம் சார்ந்தும் குறைந்தது மனச்சாட்சிக்காவது பொறுப்புக்கூற வேண்டும். ஒரு மருத்துவர் கூறியது போல பொது வைத்தியசாலைகளில் கழிப்பறைகளை பயன்படுத்துவதிலும் பொதுச்சொத்தை நுகர்வதிலும் பொதுமக்கள் எவ்வளவு தூரம் பொறுப்போடு காணப்படுகிறார்கள்? எல்லாப் பொது மருத்துவமனைகளிலும் கழிப்பறைகள் மோசமாகக் காணப்படுகின்றன.

ஏன் அதிகம் போவான்? முருகண்டியில் கழிப்பறைக்குக் காசு வாங்கப்படுகின்றது. ஆனால் அந்தக் கழிப்பறையின் சுகாதாரச் சூழல் எப்படியிருக்கிறது? மேற்கத்திய சமூகத்தின் சமூகப் பொறுப்பை கண்டு பிடிக்கக் கூடிய இடங்களில் ஒன்று கழிப்பறைகள் ஆகும். அங்கே பொதுக் கழிப்பறைகள் சுத்தமாக இருக்கும். அது நலன்புரி அரசுக் கட்டமைப்பு. தவிர அங்கே கழிப்பறைகள் உலர்ந்தவை. ஆனால் நமது கழிப்பறைகளோ ஈரமானவை. எனவே எமது சூழலுக்கு ஏற்ப வித்தியாசமாகச் சிந்தித்து கழிப்பறைகளில் சுத்தத்தைப் பேண வேண்டும்.ஆனால் பொதுக் கழிப்பறைகளை வைத்து ஒரு சமூகத்தின் பொறுப்புணர்ச்சியை மதிப்பிடலாம். எனவே பொறுப்புக்கூறல் எல்லாத் தளங்களிலும் உறுதி செய்யப்பட வேண்டும். (22ம் பக்கம் பார்க்)

மாதம் இருமுறை வெளியாகும் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை 09 ஆகஸ்ட் 2024
வெள்ளிக்கிழமை அச்சுப் பத்திரிகையாக அனைத்து
தமிழ் வர்த்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 416 841 9600
வாரம் தோறும் மின்னிதழ் மூலம் பார்வையிடலாம்

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

ரொறன்ரோ-கனடா



## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ப்ரம்மோத்ஸவ திருநாட்களில் நடைபெறும் விஷேட அபிஷேகம், ஹோமம், அலங்கார உபசார பூஜை வழிபாடுகள்

## 14.07.2024 ஞாயிறு முதல் 28.07.2024 ஞாயிறு வரை

**07.07.2024 ஞாயிற்றுக்கிழமை – சமயதீட்சை**
காலை 7:45 மணி முதல் 11:00 மணி வரை அடியார்களுக்கு "சமயதீட்சை" வழங்கப்படும்.

**12.07.2024 வெள்ளிக்கிழமை – மாலை**
விக்னேஸ்வரபூஜை, அனுக்ஞை, கணபதி ஹோமம், சங்காபிஷேகம்.

**13.07.2024 சனிக்கிழமை**
வாஸ்துசாந்தி நடைபெறும்.

14.07.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 7:45 மணி முதல் விக்னேஸ்வரபூஜை, கும்பபூஜை, ஹோமம், அபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை. காலை 10:00 மணிக்கு விஷேட பூஜை. காலை 11:00 மணிக்கு வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கணபதிநாளம், வேத, கீத, ஸ்தோத்திர, திருமுறை உபசாரங்கள் தொடர்ந்து நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி, விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் என்பன நடைபெறும்.


**காலை**


| | |
|---|---|
| 7:45 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 10:00 மணிக்கு | விசேடபூஜை |
| 11:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை நாதஸ்வர மங்கள வாத்யக் கச்சேரி விபூதி பிரசாதம், அன்னதானம் வழங்கல் |


**மாலை**


| | |
|---|---|
| 4:00 மணிமுதல் | கும்பபூஜை, அடியார்கள் பங்குகொள்ளும் விஷேட ஹோமம் ஸ்நபனாபிஷேகம், கூட்டுப்பிரார்த்தனை |
| 6:00 மணிக்கு | சாயரட்சைப்பூஜை |
| 7:00 மணிக்கு | வசந்தமண்டப அலங்கார உபசார பூஜை கலைநிகழ்ச்சி தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கல் |


கொடியேற்றம்


ஓங்கார வடிவக் காட்சி


மயூரகணபதி வடிவம்


சூரியப் பிரபைக் காட்சி


வித்யாகணபதி வடிவம்


நர்த்தனகணபதி வடிவம்

**14.07.2024 ஞாயிறு – 1ம் நாள்**
ஓங்கார கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் தாளவாத்ய லயவின்யாசம்

**15.07.2024 திங்கள் – 2ம் நாள்**
மயூர கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வயலின் ஆராதனை

**16.07.2024 செவ்வாய் – 3ம் நாள்**
சூரியப்பிரபை வடிவக் காட்சி
கலைஞர்களின் வாத்ய ஆராதனை

**17.07.2024 புதன் – 4ம் நாள்**
வித்யா கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் வீணை ஆராதனை

**18.07.2024 வியாழன் – 5ம் நாள்**
அனந்தசயன வடிவக் காட்சி
அந்தணர்களின் வேதபாராயணம்

**19.07.2024 வெள்ளி – 6ம் நாள்**
சிவலிங்கபூஜை வடிவக் காட்சி
கைலாச வாகன அலங்காரக் காட்சி

**20.07.2024 சனி – 7ம் நாள்**
நர்த்தன கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் நடன சமர்ப்பணம்

**21.07.2024 ஞாயிறு – 8ம் நாள்**
கப்பல் திருவிழா
கப்பல் வடிவ அலங்காரக் காட்சி

**22.07.2024 திங்கள் – 9ம் நாள்**
சங்கீத கணபதி வடிவக் காட்சி
கலைஞர்களின் பஞ்சரத்ன கீர்த்தனை இசை ஆராதனை

**23.07.2024 செவ்வாய் – 10ம் நாள்**
திருமஞ்சத் திருக்காட்சி
அழகிய மஞ்ச அலங்காரக் காட்சி

**24.07.2024 புதன் – 11ம் நாள்**
நம்பியாண்டார் நம்பி திருமுறை
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகம், திருமுறை பாராயணம்

**25.07.2024 வியாழன் – 12ம் நாள்**
மாம்பழத் திருவிழா
இந்துக்கல்லூரி மாணவர்களால் நாடகமாக வழங்கப்படும்


**26.07.2024 வெள்ளி – 13ம் நாள்**
சப்புற அலங்காரக் காட்சி
மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு


**27.07.2024 சனி – 14ம் நாள்**
தேர் அலங்காரக்காட்சி


**28.07.2024 ஞாயிறு – 15ம் நாள்**
தீர்த்தத் திருநாள்
காலை: விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜை
மாலை: திருவூஞ்சல்


**29.07.2024 திங்கள்**
பூங்காவனம்
சங்கீத இசை நிகழ்ச்சி

**30.07.2024 செவ்வாய்**
வைரவர் மடை
காலை: பிராயச்சித்த அபிஷேகம், மாலை: வைரவர் மடை



கைலாச வாகனம்


அனந்தசயனக் காட்சி


மஞ்சத் திருவிழா


சங்கீத கணபதி வடிவம்


சப்பறத் திருவிழா


தேர்த் திருவிழா

விரத காலங்களில் 15 தினங்களும் அன்னதானம், தண்ணீர்ப் பந்தல் (தாகசாந்தி) வழங்க விரும்பும் அடியார்கள் ஆலய காரியாலயத்தில் முற்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.


மிகவும் சிறப்பாகவும் விமரிசையாகவும் நடைபெறவிருக்கும் அலங்கார உபசார பூஜை வழிபாடுகளில் அந்தணப் பெருமக்கள், ஆலய நிர்வாகத்தினர், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை இணையத்தள ஊடகத்துறையினர், தமிழ் சமயப் பெரியோர்கள், சமூக நலன் விரும்பிகள், தமிழ் பற்றாளர்கள், கல்விமான்கள், சான்றோர்கள், கலைஞர்கள், தொண்டர் ஸ்தாபனத்தினர், வர்த்தகப் பிரமுகர்கள், மன்ற உறுப்பினர்கள், சமூக ஊக்குவிப்பாளர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், உபயகாரர்கள், தொண்டர்கள், சமய சொற்பொழிவாளர்கள், பஜனைக் குழுவினர்கள், அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Aadi Amavasai Viratham**
ஆடி அமாவாசை விரதம்
(பிதிர்தர்ப்பணம்)
03.08.2024 சனிக்கிழமை

**Aadipoora Viratham**
ஆடிப்பூர ருதுசாந்திப் பெருவிழா
06.08.2024 வியாழக்கிழமை

**Varaluxmi Viratham**
வரலட்சுமி விரதம்
(சுமங்கலி பூஜை, திருவிளக்குப் பூஜை)
16.08.2024 வெள்ளிக்கிழமை


நம்பியாண்டார் நம்பி உற்சவம்


கப்பல் திருவிழா

## அனைவரும் வருக! இறையருள் பெறுக!

இங்ஙனம் சிவப்பணியில் நிற்கும்
"சிவாச்சார்ய குலபூஷணம்", "சிவாச்சார்ய கலாநிதி"
**சிவஸ்ரீ. பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**
ஆலய பிரதமகுரு, ஆலயஸ்தாபகர், முதல்வர்


தீர்த்தத் திருவிழா


மாம்பழத் திருவிழா

1.416.291.8500 www.vinaayagar.com vinaayagar@gmail.com vinaayagar

# தமிழ்பொது வேட்பாளர் நிறுத்தப்படுவாரா?

இந்த ஆண்டு இடம் பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற் கான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் இதற்கு முன்னரும் இந்தப் பத்தியில் நான் விவாதித்திருக்கின்றேன். முயற்சி கைவிடப்படவில்லை. ஆனால் எதிர்பார்த்தது போன்று நகர்வுகள்



வேகம் கொள்ளவில்லை. ஆரம்பத்தில் இந்த விடயத்தை கடுமையாக எதிர்த்த வர்களும் இப்போது பதற்றமடைய வில்லை. ஏனெனில், ஆரம்பத்தில் இந்த விடயத்தில் காணப்பட்ட தீவிரம் தற்போது குறைந்திருப்பதே இதற்கான காரணமாகும்.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்னும் முயற்சி கடந்த தேர்தல்களின் போதும் பேசப் பட்ட விடயம் தான். ஆனால் இம் முறை பேசப்பட்டது போன்று, இம் முறை அதற்காக உழைக்கப்பட்டது போன்று, முன்னர் ஒருபோதும் நிகழ வில்லை. தமிழ் மக்கள் பேரவையினால் ஒரு முயற்சி மேற் கொள்ளப்பட்டதாக கூறப்பட்ட போதிலும் அது ஒரு தன்னிச்சையான முயற்சி. சுயாதீன நிபுணர் குழுவென்னும் பெயரில் சிலர் தன்னிச்சையாக கட்சிகளுடன் உரை யாடிய போதிலும் கூட, அவர்களை பிரதான கட்சிகள் பெரிதாக பொருட் படுத்தியிருக்கவில்லை.

இவ்வாறானதொரு சூழலில் அந்த முயற்சியானது எவராலுமே கண்டு கொள்ளப்படாத முயற்சியாகவே காணா மல் போனது. தற்போது மேற்கொள் ளப்படும் முயற்சிக்கும் முன்னைய முயற்சிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. எனினும் முன்னர் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் உரை யாடியவர்கள் சிலர் தற்போதைய முயற்சியிலும் இணைந்திருக்கின்றனர். முன்னர் இந்த விடயம் பெருமளவிற்கு கற்பனை சார்ந்ததாகவே இருந்தது. ஆனால் தற்போது முன்னேற்றகரமான தாகவும் யதார்த்தபூர்வமானதாகவும் இருக்கின்றது.

எனினும் இந்த விடயத்தில் இன்னும் அதிகம் தடைகளை தாண்ட வேண்டி யிருக்கின்றது. இரண்டு வகையான தடைகள் இருக்கின்றன. ஒன்று, இந்த விடயத்தை முன்னெடுக்கும் சிவில் சமூக அமைப்புகள் சோர்வடையாமல் இருப்பது. அத்துடன், எவ்வாறான தடைகள் வரினும் எடுத்துக் கொண்ட விடயத்தை வெற்றி நோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்னும் உறுதிப் பாடு. இரண்டு, தமிழ்த் தேசியக் கட்சிகளில் பெரும் பாலானவற்றை ஓரிடத்திற்கு கொண்டு வருவது. இந்த இரண்டு தடைகளைத் தாண்டு வதில் தான் தமிழ் பொது வேட்பா ளரை நிறுத்தும் இலக்கு வெற்றி பெற முடியும். ஒரு வேளை சில கட்சிகள் இறுதி நேரத்தில் தடுமாறினாலும் கூட, எடுத்துக்கொண்ட விடயத்தை ஒப்பேற்ற வேண்டும் என்பதில் சிறு தடுமாற்றமும் இருக்கக்கூடாது.

தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் இலக்கிற்காகவே தமிழ் சிவில் சமூக அமைப்புகள் ஒன்றுபட்டன. செயற் படும் ஆர்வத்தோடு இருக்கின்றன. தேசத்தை கட்டியெழுப்பப் போவதான ஒரு இலக்கு தொடர்பில் பேசிக் கொண்டாலும் கூட, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு இல்லாமல் அவ்வாறான ஒன்றுபடுதல் சாத்தியப் பட்டிருக்காது. எனவே தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் அடிப்படை யில் ஒன்றுபட்டிருக்கும் அமைப்பு களின் முதன்மையான இலக்கு, தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை ஜனாதி பதித் தேர்தலில் நிறுத்துவது தான். இந்த முதல் முயற்சியில் தோல்வி யுற்றால், அதன் பின்னர் தமிழ் மக்கள் பொதுச் சபை என்னும் பெயரில் எந்தவொரு முயற்சியையும் முன்னெ டுக்க முடியாமல் போகும். முதற் கோணல் முற்றிலும் கோணலாகும் என்பது போல், எடுத்துக் கொண்டு முதல் முயற்சியை ஒப்பேற்ற முடியா விட்டால், அதன் பின்னர் குறித்த அமைப்பு இயங்கும் தகுதியை கொண் டிருக்க முடியாது. முன்னர் தமிழ் மக்கள் பேரவைக்கும் இது தான் நடந்தது. தமிழ் மக்கள் பேரவை என்னும் பெயரில் ஒன்றுபட்டவர்களால், தமிழ் கட்சிகளை ஒன்றுபடுத்தும் முயற்சியில் வெற்றி பெற முடிய வில்லை. இதற்கு என்ன காரணம்?

கட்சிகளின் நலன்களையும் அவற்றின் சிந்தனைப் போக்கையும் தமிழ் மக்கள் பேரவையில் இருந்தவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. பேரவை, ஆரம்பம் முதல் இறுதி வரையில் விக்னேஸ்வரன் என்னும் பிரமுகர் ஒருவரிலேயே முற்று முழுதாக தங்கி யிருந்தது. இதன்மூலம் ஏனைய கட்சி களை தங்களின் பக்கமாக ஈர்க்க லாம் என்று தவறாக சிந்தித்தது. ஆனால் என்ன நடந்தது? இறுதியில் விக்னேஸ் வரனுக்கு எதிராக இரவோடு இரவாக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்ததன் மூலம் தமிழரசுக் கட்சி அதன் பலத்தை காண்பித்தது.

விக்னேஸ்வரன் எவரையெல்லாம் தள்ளி வைத்திருந்தாரோ, அந்தக் கட்சிகளின் ஆதரவால் விக்னேஸ்வரனின் தலை தப்பியது. இவ்வாறான விடயங்கள் நிகழ்ந்த போது, தமிழ் மக்கள் பேரவை வெறும் பார்வை யாளராகவே இருந் தது. இறுதியில் கட் சிகளை ஒன்று படுத்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்கு குறிப்பாக சம்பந்தன் தலைமை க்கு மாற்றான ஒரு தலைமையை ஏற்படுத்தப் போவதாக கூறிக்கொண்ட தமிழ் மக்கள் பேரவை, இறுதியில் விக்னேஸ்வரனை ஒரு கட்சியாக வெளியில் தள்ளிவிட்டது.

தமிழ் மக்கள் பேரவையின் அணுகு முறை சரியானது. அதாவது, கட்சி களும் சிவில் சமூக அமைப்புகளும் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான களங்களை திறக்க வேண்டும் என்னும் நோக்கம் சரியானது. ஆனால் தேர்தல் நலன்களுள்ள கட்சிகளுடன் இணை ந்து செயற்படுகின்ற போது, அந்தக் கட்சிகளின் எல்லைகள் தொடர்பில் தெளிவான புரிதல் இருக்க வேண்டும். இந்த விடயத்தில் தமிழ் மக்கள் பேரவையாக ஒன்றுபட்டிருந்தவர்கள் தவறிழைத்தனர். இதற்கு என்ன கார ணம்?

சிவில் அமைப்புகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்கள் எப்போதுமே தங்களை அதிகார அரசியலிலிருந்து (இதனை சிலர் நேரடி அரசியல் என்று வரைறுத்துக் கொள்ள முயற்சிக்கலாம். ஆனால் அது சரியான வரையறைதானா என்ப தில் கேள்விகள் உண்டு) விலத்திக் காண்பிக்க முயற்சி க்கின்றனர். அதேவேளை, கட்சிகளின் நிறங்கள் தங்கள் மீது பட்டுவிடக்கூடாது என்னும் எச்சரிக்கையுள்ளவர்களாகவும் நடந்து கொள்வதுண்டு.

இதன் காரணமாக இவர்களில் அனே கர் கட்சிகளை தேவைக்கு அணுகு பவர்களாகவே இருக்கின்றனர். இதன் காரணமாகவே கட்சிகளும் இவர்களை அதிகம் நம்பாமலேயே செயற்படுகின் றன. தமிழ் மக்கள் பொதுச் சபையாக ஒன்றிணைந்திருப்பவர்களும் இந்த சிக்கல்களை கடக்க வேண்டியிருக் கின்றது. தமிழ் மக்கள் பொதுச் சபை தேவைப்பட்டால் நேரடி அரசியலில் இறங்குவதற்கும் தயாராக இருக்க வேண்டும். இங்கு நேரடி அரசியல் என்பது ஒரு கட்சியாக செயற்படுவது என்பதல்ல. மாறாக, சரியான வேட்பாளர் களை அடையாளம் கண்டு கட்சிகளு டன் இணைப்பது. அதேவேளை இளைய தலைமுறையினர் கட்சி அரசியலுக்குள் பரீட்சயமாவதற்கும் சிறந்த தலைவர்களாக வருவதற்கு மான சூழலை கனியச் செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண் டும். அதிகார அரசியலைக் கண்டு ஓடுவதால், அதன் விளைவுகளை எதிர் கொள்ள முடியாது. சிவில் சமூக அமைப்புகள் எதற்காக அரசியலில் கரிசனை காண்பிக்கின்றன? அரசியல் கட்சிகள் இருக்கும் போது, எதற்காக சிவில் சமூக அமைப்புகள் தலையீடு செய்ய வேண்டும்? தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை அரசியல் கட்சிகளிடம் ஒப்படைத்துவிட்டு, சிவில் அமைப்புகள் அமைதியாக இருக்கலாம்தானே. ஒன்றில் அவர்கள் இதனை முன்னெடுக் கலாம் அல்லது கைவிடலாம். இப்படியாக கேள்விகளு க்கு என்ன பதில்? ஆனாலும் சிவில் சமூக அமைப்புகள் தலையீடு செய் கின்றது. ஏன் ஏனென்றால் நாம் விரும்பும் மாற்றமொன்றை அரசியல் கட்சிகளால் ஏற்படுத்த முடியாமல் இருக்கும் போதுதானே அல்லது அதில் பின்னடைவுகள் காணப்படு கின்ற போது தான், சிவில் சமூகம் அரசியலில் தலையீடு செய்கின்றது. அதுதான் விடயமென்றால், நேரடி அரசியலில் ஏன் சிவில் சமூக அமை ப்புகள் மற்றும் தனிநபர்கள் ஈடுபட முடியாது? இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர்


கட்டுரையாளர்:-
திருகோணமலை இருந்து
- யசீந்திரா -




நிலைப்பாடு என்பது அடிப்படையில் மாற்றத்திற்கான ஒரு அரசியல் வேலைத்திட்டம். அந்த மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு நாம் ஒரு அணி யாக செயற்பட வேண்டியிருக்கின்றது. இதில் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் இன்றிமையாது. ஆனால், கட்சிகளும் சூ ழ்நிலையை கருத்தில் கொண்டு முன்னோக்கி செயலாற்ற ஒன்றுபட வேண்டும். தென்னிலங்கையிலிருந்தும் வெளியாரிடமிருந்தும் செய்திகள் வரு மென்று எண்ணிக் கொண்டு இலவு காத்த கிளியாக இருக்கக் கூடாது. வெளியாரின் தலையீடுகளை சமன் செய்வதில் தான் சிவில் சமூகத் தலை யீடுகள் அதிகம் முக்கியம் பெறுகின் றது. இதனை கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதன் காரணமாகவே அரசியல் கட்சி களும் (22ம் பக்கம் பார்க்க)




# தூர நோக்கற்ற தமிழர் அரசியலும் தென்னிலங்கை போலி வாதங்களும்

தமிழ் மக்களின் தேசிய அரசியலை இயங்க முடியாத நிலைக்குள் கடந்த 15 ஆண்டு நிகழ்வுகள் நகர்த்தியுள்



ளது. அதில் பயணித்த அனைத்து அரசியல் வாதிகளும் அதற்கு பொறுப்பானவர்களாகவே உள்ளனர். அவர் அனைவரது நடவடிக்கைகள் எதிரிக்கு சேவை செய்வதாகவே அமைந்திருந்தது. எந்த திசையிலும் தமிழ் மக்களது தேசிய அரசியல் நகர முடியாத நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. அதனை மீட்டெடுப்பதற்குரிய தலைமையே தற்போது தமிழ் மக்களுக்கு அவசியமானதாகத் தெரிகிறது. அதனை தனி ஒரு தலைமைத்துவத்தால் சாத்தியப்படுத்த முடியாது. அதனை உணர்ந்து கொண்ட மக்கள் கூட்டமும் சமூக செயல்பாட்டு அணிகளும் இளம் தலைமை களும் தூர நோக்குடைய உபாயங்களுமே தேவையாக உள்ளன. அதனை நோக்கி செயல்படத் தவறும் பட்சத்தில் தமிழ் மக்கள் சாதி, மத, பிரதேச அடிப்படையில் குழுக்களாக மாற்றப்பட்டு மோதி அழிவடையும் நிலையே ஏற்படும். இத்தகைய நிலைமையைக் கடக்க தூரநோக்கும் தீர்க்கதரிசனமும் கொண்ட அரசியல் அவசியமானது. கடந்த காலங்களில் தமிழ் அரசியலின் மேற்கொண்ட தவறுகள் எப்படியான விளைவைத் தந்துள்ளது என்பதை விளங்கிக் கொள்ளவே இக்கட்டுரை முயல்கிறது.

இலங்கைப் படையினர் மீது தமிழ் மக்களுக்கு கோபமுள்ளதெனில் எனக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருக்க மாட்டார்கள் என முன்னாள் இராணுவத் தளபதியும் பீல்ட் மார்ஷலும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்:

சர்வதேச சட்டத் திட்டங்களுக்கு அமைவாகவே போர் நடைபெற்றது. போரின் இறுதிக் கட்டத்தில் கனரக ஆயுதங்கள் பயன் படுத்தப்படவில்லை. மனிதாபிமான நடவடிக்கையின் போது 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படுவதனை ஏற்க முடியாது. போரை திரிபுபடுத்தி நன்மையடைய முயலும் சிலரது கருத்து மட்டுமே. போர் முடிவடைந்து 6 மாதங்களில் நடை பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது தமிழ் மக்கள் அமோக ஆதரவை வழங்கினர். தமிழ் மக்கள் அவ்வாறு கொல்லப்பட்டிருந்தால் இப்படி ஆதரவு வழங்கியிருப்பார்களா என பொன்சேகா கேள்வி எழுப்பியுள்ளார். இராணுவத்தின் மீது கோபம் இருந்திருந்தால் இப்படி வாக்களித்திருப்பார்களா என்றார்.

சரத் பொன்சேகாவின் விவாதம் நியாயமானதாகவே தென்படுகிறது. அது ஒரு தர்க்க ரீதியான விவாதம் மட்டுமே. ஆனால் அத்தகைய விவாதத்தின் மறுபக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது முடிவுகளின் தூரநோக்கற்றதும் தீர்க்கதரிசனமில்லாத முடிவின் விளைவென்பதே தெரிகிறது. அரசியலில் தூரநோக்கும் தீர்க்கதரிசனமும் அடிப்படையானது. அதிலும் ஓரினத்தின் விடுதலைக்கு தலைமை தாங்கும் தரப்புகள் தமது முடிவுகளை எடுக்கும் போது எதிர் காலத்தின் இருப்பு முக்கியமா னது. அத்தகைய இருப்பை கணிப்பிடாது எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஓரினமே துயரப்பட வேண்டிய நிலை ஏற்படும். அதனையே தற்போது தமிழினத்திற்கு சில தலைவர்கள் விட்டுச் சென்றுள்ளனர்.

பீல்ட் மால் எனும் விருதை வழங்கியது மட்டுமல்லாது ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களது வாக்குகளையும் வழங்கியமை வரலாற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் என்றுமே மறுக்க முடியாத அரசியல் தவறாகவே அமையவுள்ளது.

தமிழ் மக்களை கொல்வதற்கு தலைமை தாங்கிய தளபதி ஒருவருக்கு பெரும் ஆதரவை வழங்குமாறு தமிழ் மக்களுக்கு கோரிக்கை முன்வைத்தமை தற்போது எத்தகைய அரசியல் தவறென்பது தெரிகிறது. மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் 1,46,000ற்கும் மேற்பட்ட பொது மக்கள் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டதாக குறிப்பிட்ட அறிக்கையைக் கடந்து ஐக்கிய நாடுகள் சபையால் முன் வைக்கப்பட்ட 40,000 பொது மக்கள் இறுதிப் போரில் கொல்லப்பட்ட என்ற செய்தியைக்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அன்றைய ஜனாதிபதி வேட்பாளர் மறுக்கிறார். பீல்ட் மால் என்பது இன்னோர் நாட்டுடன் போர் புரிந்து வெற்றியை அடைந்த தளபதிக்கு வழங்கப்படும் விருதாகவே கருதப்படுகிறது.

உலக வரலாற்றில் அத்தகைய பீல்ட் மால் விருது அவ்வாறான வீரச் செயலுக்கே வழங்கப்படுகிறது. அவ்வாறு 2009 இறுதிக் கட்டப் போரை இன்னோர் நாட்டுடன் நிகழ்த்தியதென வும் இன்னோர் வலுவான இராணுவத்துடனும் நிகழ்த்தியதெனவும் கருத வாய்ப்புள்ளது. இது ஒரு தர்க்க ரீதியான விவாதமாகவே புரிந்து கொள்ளப் பட வேண்டும்.

இந்தியாவின் வரலாற்றிலேயே இது வரை இருவர் மட்டுமே பீல்ட் மாஷல்களாக அறியப்பட்டுள்ளனர். ஒருவர் 1973 இல் 1971 ஆம் ஆண்டு நிகழ்ந்த இந்திய-பாகிஸ்தான் (Sam Manek saw) போருக்காக பீல்ட் மால் வழங்கப்பட்டது. இன்னொருவர் 1986 இல் அறியப்பட்டார். அதுவும் இந்திய- பாகிஸ்தான் போரில் 1947 இல் (K.M.Cariappa) இராணுவத் தளபதியாக விளங்கியதற்காக வழங்கப் பட்டது. நல்லாட்சிக் காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடனேயே சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மால் வழங்கப்பட்டது என்பது கவனத் திற்குரியது.

தற்போது அத்தகைய பீல்ட் மாலின் விவாதங்கள் தமிழினத்தின் அரசியலையே கேள்விக்குட்படுத்துமளவுக்கு மோசமடைந்துள்ளது. தமிழ் மக்களது துயரத்தையோ, வலியையோ உணராத ஒருவருக்கு யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 63 சத வீத வாக்குகளும் வன்னித் தேர்தல் தொகுதியில் 66 சதவீத வாக்குகளும் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 68 சதவீதவாக்குகளும் திருகோணமலையில் 54 சத வீத வாக்குகளும் அளிக்கப்பட்ட வரலாற்றுத் தவறை தமிழ் மக்கள் மேற்கொள்ள வழி வகுக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவும் அதன் தலைமையினாலும் எடுக்கப்பட்ட முடிவு ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிரானதாக பார்க்கப்பட்டது. அது மட்டுமன்றி தமிழ் மக்களின் அரசியலாகவோ, தமிழ் மக்களின் விடுதலைக்கான அரசியலாகவோ கருதவில்லை என்பது கவனத் திற்குரியது. 2010 இல் மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதன் தலை

**கட்டுரையாளர்:**
**இலங்கையில் இருந்து**
**பேராசிரியர்**
**– K.T.கணேசலிங்கம் –**



மையை தமிழ் பொது வேட்பாளராக நிறுத்தி தேர்தலை எதிர் கொண்டிருந்தால் தற்போதைய தமிழ் மக்களின் கையறு நிலை அரசியல் தோன்றியிருக்க மாட்டாது. மாறாக தமிழ் மக்களின் அரசியலே மேலோங்கியதுடன், இலங்கைத் தீவின் அரசியல் பொருளாதாரமே பலமானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமைந்திருக்கும்.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னான இலங்கைத்தீவின் அரசியலை நியாயத் தன்மையுடன் நகர்த்திச் செல்வதற்கான வாய்ப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்தது. தென்னிலங்கைக்கு மிதவாத வலுவினால் தமிழ் மக்களின் பலமான அரசியல் நியாயப்படுத்தலை ஏற்படுத்தி அதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு கிடைத்த போது பயன் படுத்திக் கொண்டு செயல்பட்டிருக்க முடியும்.தமிழ்த் தலைமைகளின் பலவீனமே தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்குக் கிடைத்த வாய்ப்பாக அமைந்திருந்தது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு தென்னிலங்கை வெற்றிகரமான நகர்வுகளை மேற்கொண்டது. (20ம்பக்கம் பார்க்க)



# இலங்கையில் நிகழ வேண்டியது!

அரசியலில் பிரதானமாக இரண்டு வகை உண்டு. ஒன்று, சமூக மீட்புக்கான அரசியல். இதனை மக்கள் நலன் அரசியல் என்பர். மக்களுடைய நலனுக்காகத் தம்மையும் தமது கட்சி அல்லது இயக்கத்தையும் அர்ப்பணித்துச் செயற்படுவது. இதில் மக்களும் அவர்களுடைய நலன்களும் தேவைகளுமே முதன்மைப்பட்டிருக்கும். இதனுடைய உச்சமாக மக்களுக்கெனத் தம்மையும் தம்முடைய உயிரையும் அர்ப்பணித்துச் செயற்படுவதாகவே விடுதலைப் போராட்ட அரசியல் இருந்தது.

இந்த அரசியல் தோற்றுப் பின்னடைந்தாலும் மக்கள் இந்த அரசியலை முன்னெடுத்தோரை மறப்பதில்லை. தங்களுடைய மனதில் அதற்கான அவர்களுக்கான இடத்தைக் கொண்டிருப்பர்.

இரண்டாவது, தங்களுடைய நலன்களுக்காக மக்களை முன்னிறுத்திச் செய்யப்படும் அரசியல். இதையே இப்பொழுது பெரும்பாலான கட்சிகளும் தலைமைகளும் செய்து கொண்டிருக்கின்றன. மக்களுக்காகத் தியாகம் செய்வதற்கும் மக்களுக்காகச் செயற்படுவதற்கும் பதிலாக மக்கள் தமக்காகத் தியாகம் செய்ய வேண்டும், தங்களுடைய நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கருதிச் செயற்படுவது.

இதனால் கட்சிகளும் தலைமைகளும் வளர்ந்து கொண்டும் வாழ்ந்து கொண்டும் இருக்கும் நிலை தொடருமே தவிர, மக்களும் சமூகமும் வளர்ச்சியடைவதில்லை. பதிலாக மக்களின் (சமூகத்தின்) நிலை மேலும் மேலும் மோசமடையும்.

முதலாவதில் மக்களின் மீதான அதிகாரம் செலுத்தும் போக்குக் குறைவாக உள்ளது. இரண்டாவதில் மக்களின் மீது அதிகாரம் செலுத்தும் போக்கு தூக்கலாகக் காணப்படுகிறது. அதாவது, தாம் தீர்மானிப்பதை, தாம் விரும்புவதை மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடிருக்கும்.

இத்தகைய அதிகாரப் போக்கும் மக்கள் நலனை விட்டுக் கட்சி நலன், தமது நலன் எனச் செயற்படும் தன்மையும் ஒரு கட்டத்தில் மக்களின் மனதில் வெறுப்பை ஏற்படுத்துவதுண்டு. இதுவே இப்போதைய நிலையாகும்.

தற்போதுள்ள தமிழ் அரசியற் சக்திகளிலும் தலைமைகளிலும் நம்பிக்கையிழந்து அவற்றை ஒதுக்குவதற்கு மக்கள் வந்திருப்பது மேற்படி காரணங்களினாலேயே. தமிழர்களிடத்தில் மட்டுமல்ல, இலங்கைத் தீவிலுள்ள அனைத்துச் சமூகங்களிடத்திலும் இந்த நிலையே ஏற்பட்டுள்ளது. இதனால் தான் அரகலய எழுச்சி அந்தளவுக்கு வெற்றியைக் கொடுத்தது. ஆட்சியாளர்களின் மீது மக்கள் வெறுப்படைந்ததன் அடையாளமே அது.

காரணம், மக்களுக்கு அப்பாலான, மக்கள் விரோத அரசியலை இந்தத் தரப்புகள் செய்ய முற்பட்டதேயாகும். இதனால் இலங்கைச் சமூகங்கள் அத்தனையும் இன்று நெருக்கடிகளைச் சந்தித்துள்ளன. இந்த நெருக்கடிகள் இரண்டு வகையானவை. ஒன்று தனித்தனியான நெருக்கடி. மற்றது கூட்டு நெருக்கடி.

இன நெருக்கடி, இன ஒடுக்குமுறை போன்றவற்றைத் தனித்தனியாகவும் பொருளாதார நெருக்கடி, அந்நிய ஆக்கிரமிப்புப் போன்றவற்றை கூட்டாகவும் சந்தித்து நிற்கின்றன.

இதைச் சுருக்கிச் சொல்வதானால், கடந்த 75 ஆண்டுகளிலும் தலைமைகளும் அவற்றின் தரப்புகளும் (கட்சிகளும்) வெற்றியடைந்திருக்கின்றனவே தவிர, மக்கள் வெற்றியடையவில்லை. ஒரு உதாரணத்துக்குத் தமிழரின் அரசியலை நோக்கலாம். தமிழ் மக்கள்



எப்போதும் எத்தகைய இடரின் போதும் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவாகவே நின்றுள்ளனர். அது யுத்த காலமாயினும் சரி, யுத்தத்துக்கு முந்திய காலத்திலும்சரி, யுத்தத்திற்குப் பிந்திய சூழலிலும் சரி தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுத்த தலைமைகளையும் தரப்புகளையுமே (கட்சிகளையும் இயக்கங்களையும்) ஆதரித்துள்ளனர். அவற்றையே வெற்றியடைய வைத்துள்ளனர்.

இப்படியெல்லாம் ஓர்மமாக நின்ற மக்களுக்கு இந்தத் தலைமைகளால் விளைந்த நன்மைகள் என்ன? மக்களுடைய எந்தப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டன? பதிலாக மேலும் மேலும் பலநூறு பிரச்சினைகள் பெருகியே உள்ளன. இப்பொழுது மாடு மேய்ப்பதற்கான மேய்ச்சற்தரைகளுக்குக் கூடப் பிரச்சினை என்ற அளவுக்கு நிலைமை வந்துள்ளது.

இதைத் திசை திருப்பும் விதமாக அவை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமாக அரச எதிர்ப்பையும் இனவெறுப்பையும் முன்னிறுத்துகின்றன. அரச எதிர்ப்பை அர்த்த பூர்வமாகச் செய்தால், அரசினால் வாலாட்ட முடியுமா? அதற்குத் தம்மை அர்ப்பணித்துக் களத்தில் இறங்கிச் செயற்பட வேண்டும். போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதற்கு எந்தத் தரப்பும் எந்தத் தலைமையும் தயாரில்லை. இதனால் அரச எதிர்ப்பை முன்னிறுத்தித் தம்முடைய அரசியல் வரட்சியையும் பலவீனத்தையும் மறைத்துக் கொள்ள முற்படுகின்றன.

இதிற் கூட கள்ளத்தனமும் மோசடிகளும் உண்டு. பிறரைக் குற்றம் சாட்டி தாம் தப்பித்துக் கொள்வதற்காக உள் முரண்பாடுகளைக் காரணம் காட்டி, அவற்றைப் பெருப்பித்து ஒவ்வொரு அணியும் தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ள முன்னிற்கின்றன.

இதன் விளைவே தமிழ்த்தேசியத் தரப்புகள் இன்று பல துண்டுகளாக அணிகளாக உடைந்து தனித்தனியாக நிற்பதாகும். அப்படியென்றால், எந்த அணி உண்மையில் தூய்மையானது சரியானது வீரியமானது மக்களுக்கான விடுதலையைப் பெற்றுக் கொடுக்கக் கூடியது? என்ற கேள்வி எழுகிறது அல்லவா!

இதேநிலை தான் சிங்களத் தரப்பிலும் முஸ்லிம்களிடத்திலும் உண்டு. ஐ.தே.க சிறிலங்கா சுதந்திரக் கட்சி என இரண்டு பெருந்தரப்புகளாக இருந்த சிங்களக் கட்சிகள் இன்று உடைந்து பல அணிகளாகப் பெருகியுள்ளன. ஐ.தே.க உடைந்து, ஐக்கிய மக்கள் சக்தி (சஜித் பிரேமதாச தரப்பு), ஐ.தே.க என இரண்டு பிரிவுகளாக உள்ளது. இதை விட சிறு சிறு குழுக்களும் அணிகளும் தனித்தனியாக உள்ளன.

மறுவளத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உடைந்து பொது ஜனபெரமுன (ராஜபக்ஸவினரின் தரப்பு) சிறிலங்கா சுதந்திரக் கட்சி என மாறியிருக்கிறது. இந்த இரண்டு தரப்புகளிலிருந்து வெளியேறி வேறு சில அணிகளும் குழுக்களுமாக தனித்தனியாக உள்ளன. இப்படிச் சிதறுண்டிருக்கும் அனைத்துத் தரப்பும் ஒரே விதமாகவே உள்ளன. இவற்றுக்கிடையில் எந்தப் பெரிய வித்தியாசங்களையும் காண முடியாது. ஆனால், ஒன்றையொன்று குற்றம் சாட்டிக் கொள்கிறது. மற்றவர்களை விடத் தாம் சுத்தவாளிகள் என்றே ஒவ்வொரு தரப்பும் சொல்லிக் கொள்கின்றன.

மலையகக் கட்சிகளிடத்திலும் முஸ்லிம் கட்சிகளிலும் இது தான் நிலைமை. இன்னும் ஆயிரத்தி எழுநூறு ரூபாய் சம்பளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் தான் மலையகக் கட்சிகள் இருக்கின்றன. அங்கே பல தலைமுறைகளாக வாழ்கின்ற மக்களுக்கு ஒரு துண்டு நிலத்தைப் பெற முடியாமல் தான் அத்தனை கட்சிகளும் பிரகடனங்களைச் செய்கின்றன. அவ்வறே, முஸ்லிம்களின் பதட்டத்தைத் தணிக்குக் கூடிய அளவுக்கு ஒரு முஸ்லிம் கட்சியும் இன்றில்லை.

ஆக மொத்தத்தில் தமிழ், சிங்கள, மலையக, முஸ்லிம் கட்சிகளும் தலைமைகளும் மக்களைத் தோற்கடித்தே தம்மை வளர்த்திருக்கின்றன நிலை நிறுத்தியுள்ளன. மக்களை எந்த நிலையிலும் இவை மீட்கவோ மேலுயர்த்தவோ இல்லை. இதனால் மக்கள் தொடர்ந்தும் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதுவும் அந்தந்தச் சமூகத்தின் தலைமைகளால்.

மக்கள் வெற்றியடைந்திருந்தால் நாடு வளர்ச்சியடைந்திருக்கும். மக்களின் வெற்றியே நாட்டின் வெற்றியாக அமைவதாகும். உலகம் முழுவதும் வரலாறு முழுவதும் நிகழும் உண்மை இது.

கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



இலங்கையில் மக்களைத் தோற்கடிக்கும் அரசியற் கலாச்சாரம் வளர்ச்சியடைந்ததால் நாடு தோற்றுப் போய் பின்னடைந்திருக்கிறது. இன்று நாட்டை மீட்பதற்காக உலகின் கால்களில் கடன் கேட்டு மண்டியிடுகிறார்கள். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு சீனா, இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசுகள் நாட்டின் வளங்களையும் நிலத்தையும் ஆக்கிரமித்து, அபகரிக்க முற்படுகின்றன. இது பேரபாய நிலையாகும்.

இந்தச் சந்தர்ப்பத்திற் தான் நாட்டின் மீதும் மக்களின் மீதும் பற்றுள்ளோர் தீவிரமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியது அவசியமாகிறது. இதில் நாட்டிலுள்ளோரும் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்தோரும் பங்களிக்க வேண்டும். படித்தோரும் வசதியுள்ளோரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும்.

முதலில் மக்கள் விரோதச் சிந்தனையுடைய அரசியலாளர்களிடம் கேள்வி எழுப்ப வேண்டும். அவர்கள் மாற்றத்துக்குள்ளாகக் கூடிய அளவுக்கு நெருக்கடிகளையும் நிர்ப்பந்தங்களையும் கொடுக்கலாம். அப்படிச் செய்யும் போது அவர்கள் மாற்றத்துக்குள்ளாக நல்ல வழிக்கு வருவர். அல்லது (22ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# கமலா ஹரிஸை முன் மொழிந்த பைடன்! ஒபாமா உட்பட முக்கிய தலைவர்கள் மௌனம்!



தேர்தல் களத்தில் இருந்து விலகுவதாக ஜோ பைடன் அறிவித்துள்ளதை வரவேற்று பாராட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, கமலா ஹாரிஸ் வேட்பாளராவதை ஆதரிக்கவில்லை என்றே தகவல் வெளியாகியுள்ளது. அமெரிக்கா ஒரு இக்கட்டான நிலையில் இருப்பதாக ஒப்புக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜனாதிபதி ஜோ பைடன் வகுத்துள்ள கொள்கைகள் மற்றும் அவரது தலைமையை வெகுவாக பாராட்டியுள்ளார்.

தேர்தல் களத்தில் இருந்து விலகியுள்ளதை தேசப்பற்றின் உச்சம் என்றும் ஒபாமா கொண்டாடியுள்ளார். இது நாட்டுக்கானது என்பதை ஜோ பைடன் நம்பவில்லை என்றால் இப்படியான ஒரு முடிவுக்கு வர வாய்ப்பில்லை என அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஜோ பைடன் முன் மொழிந்துள்ள கமலா ஹாரிஸ் தொடர்பில் ஒபாமா கருத்தேதும் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில், ஒபாமா மட்டுமின்றி, ஜனநாயக கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் கமலா ஹாரிஸ் தொடர்பில் தற்போது மௌனம் காத்து வருவதாகவே கூறப்படுகிறது.

அத்துடன் ஜோ பைடன் தேர்தல் களத்தில் இருந்து விலகியுள்ளதை அடுத்து, தற்போது யாருக்கு வாய்ப்பு என சில பெயர்களும் வெளிவரத் தொடங்கியுள்ளது. அதில் 2028ல் ஜனாதிபதி வேட்பாளராக களம் காணும் வாய்ப்புள்ள, இரண்டாவது முறையாக மிச்சிகன் ஆளுநராக பொறுப்பில் இருக்கும் Gretchen Whitmer, தற்போதைய கலிபோர்னியா ஆளுநரும் 2028ல் ஜனாதிபதி கனவுடன் இருக்கும் Gavin Newsom போக்குவரத்து செயலர் Pete Buttigieg பென்சில்வேனியா ஆளுநர் Josh Shapiro ஹொட்டல் குழுமத்தின் வாரிசும் பெரும் கோடீஸ்வரரும் தற்போதைய இல்லினாய்ஸ் ஆளுநருமான JB Pritzker ஆகியவர்களின் பெயர்களே டொனால்டு ட்ரம்புக்கு எதிராக முன் வைக்கப்படுகிறது.

இவர்களுடன் குடியரசுக் கட்சி மொத்தமாக அச்சப்படும் மிச்செல் ஒபாமாவின் பெயரும் குறிப்பிடப்படுகிறது. ஆனால் தமக்கு ஜனாதிபதி பொறுப்பில் ஆர்வல் இல்லை என்றே மிச்செல் ஒபாமா கூறி வருகிறார்.

# தூர நோக்கற்ற தமிழர் அரசியலும்

18ம் பக்கத் தொடர்ச்சி) அத்தகைய நிலை யிலேயே மீளவும் தமிழ் மக்களை நிறுத்த பல தமிழ் அரசியல்வாதிகள் முயல்கின்றனர். இலங்கைத்தீவின் அரசியல் மீளவும் தமிழ் அரசியலுக்கு வாய்ப்பான சூழலை கொடுத்துள்ளது. தற்போதைய ஜனாதிபதித் தேர்தலை தனித்துவமாக எதிர் கொள்வதன் மூலம் தென்னிலங்கையின் அரசியலில் வடக்கு, கிழக்கின் முக்கியத்துவத்தை உணர வைக்க முடியும். வடக்கு, கிழக்கு மக்களின் அடிப் படைப் பிரச்சினைகளை கவனத்தில் கொள்ள வைக்க வேண்டுமாயின் தமிழரது அரசியல் பலப்படுத்தப்பட வேண்டும். வலுவான ஒருமைப் பாட்டுடனான இருப்பை தக்கவைக்க வேண்டிய பொறுப் பாண்மை தமிழ் மக்களது அரசியலுக்கு அவசியமானது.

கடந்தகாலம் முழுவதும் தென்னில ங்கையுடன் பல தளத்தில் தமிழ் மக்கள் பயணித்துள்ளனர். அதில் உடன்பாடுகள், ஒத்துழைப்புகள், விட்டுக்கொடுப்புகள், வாக்களிப்புகள் என பல விடயங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் எதிலும் தமிழ் மக்கள் எத்தகைய விளைவையும் எட்ட முடியவில்லை. மாறாக துயரங்களையும் ஆக்கிரமிப்புகளையுமே தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ளனர். இதற்கான அடிப்படை தமிழ் அரசியலில் காணப்பட்ட பலவீனமே. அத்தகைய பலவீனத்தை மாற்றிக் கொள்வது ஒன்றும் இலங்கைத்தீவின் அரசியலுக்கு எதிரானதல்ல.

இலங்கைத்தீவின் அரசியலில் தமிழ் மக்களின் இருப்பை பாதுகாப்பதற்கானதே. அதன் மூலம் இலங்கைத்தீவை பாதுகாப்பதாகவே இருக்கின்றது. இலங்கைத்தீவு தனித்து ஓரினத்திற்கு மட்டுமல்லாது அனைத்து இனங்களுக்கும் உரிய இறைமையை பாதுகாப்பதற்காகவே. அமெரிக்கா நூற்றுக்கணக்கான தேசியங்களால் கட்டப்பட்ட நாடு. எல்லா தேசியங்களுக்கும் சம வாய்ப்பைக் கொடுக்கும் அதே நேரம் தமது தனித்துவங்களைப் பாதுகாக்கும் பொறுப்புடைமையையும் கொண்டுள்ள அரசியல் அமைப்பை பகிர்ந்துள்ளது. எனவே இலங்கைத்தீவின் அரசியலை பல்லின தேசிய அரசியலாக மாற்றுவதற்கான அடியை தமிழ் மக்கள் முன்வைக்க வேண்டும். (22ம் பக்கம் பார்க்க)



உ
சிவமயம்



# ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம் கனடா
# Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr. North York, ON M9L, 2A7. Tel : 416-744-9568

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்
அருள்மிகு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகபெருமாள் மெய்யடியார்களே!

## அருள்மிகு ரொறன்ரோ திருச்செந்தூர் முருகப்பெருமான் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் - 2024

சகலவளங்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்ராரியோ மாகாண நோர்த் யோர்க் நகரத்தில் கோவில் கொண்டு வேண்டுவோருக்கு வேண்டும் வரத்தை அள்ளிக் கொடுக்கும் திருச்செந்தூர் முருகப்பெருமானுக்கு நிகழும் குரோதி வருடம் ஆடி மாதம் 3ம் திகதி (18.07.2024) வியாழக்கிழமை வளர்பிறை துவாதசி திதியும் கேட்டை நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தில் கொடியேற்றத்துடன் பதினொரு தினங்கள் பிரமோற்சவம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. பக்தர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு எம்பெருமாள் திருவருளை பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 18-07-2024 | வியாழக்கிழமை |
| தேர்த் திருவிழா | 27-07-2024 | சனிக்கிழமை |
| பூங்காவனம் | 29-07-2024 | திங்கட்க்கிழமை |
| சப்பறம் | 26-07-2024 | வெள்ளிக்கிழமை |
| தீர்த்தம் | 28-07-2024 | ஞாயிற்றுக்கிழமை |
| வயிரவர் மடை | 30-07-2024 | செவ்வாய்க்கிழமை |

கைலாசவாகனத்திருவிழா 24.07.2024 புதன்கிழமை

### உற்சவகால பூஜை நேரங்கள்

**காலை**

08:00 மணிக்கு ஆலய பூஜஜ
08:30 மணிக்கு சங்கல்ப்பம், கும்பபூஜை, அபிஷேகம்
10:00 மணிக்கு ஆலய பூஜஜ
11:30 மணிக்கு வசந்தமண்டப பூஜை

**மாலை**

05:30 மணிக்கு அபிஷேகம்
07:00 மணிக்கு ஆலய பூஜை
08:00 மணிக்கு வசந்தமண்டப பூஜை

### மகோற்சவகுருக்கள்

சிவாகம தத்துவநீதி
சிவஸ்ரீ. நாகரட்ன கார்த்திகேயக் குருக்கள்

**சாதகாச்சார்யார்**
வெங்கடரமண சர்மா
கொங்காதர குருக்கள்


**ஆலய பிரதமகுருக்கள்**
சிவாஹம சேகரம்" சிவஸ்ரீ தர்மபிரதீபன் குருக்கள்'
கண்ணன் குருக்கள்

**இணைக்குருமார்கள்**
பிரம்மஸ்ரீ கை. ஸ்ரீ ராகுலன் சர்மா
சிவாச்சார்யா திலகம்.
சிவஸ்ரீ து. ராதாகிருஷ்ணக் குருக்கள்


**ஆலய மங்கள வாத்தியம்**
திரு சிவமயம் குழவினர்
(சிவநாதலயம் கனடா)

**ஆலய ஸ்தபதி**
சிற்பகலைமாமணி விஸ்வபிரம்மஸ்ரீ
செல்வராஜா குணாளன் கனகாலயா சிற்ப்பாலயம் கனடா

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! வெளியூர் பயணங்களும் அதன் மூலம் லாபமும் கிடைக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். முக்கிய நிறுவனங்களின் பங்களிப்பு இருப்பதால் வியாபாரம் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது. உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகும். வெளியூர் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ள நேரிடும். சிக்கல்கள் பிறரால் ஏற்பட்டாலும் அதை எளிதில் சமாளித்து விடும் தைரியம் உண்டாகும்.





ரிஷபராசி அன்பர்களே! ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பிரச்னைகள் கட்டுக்குள் இருக்கும். பங்குதாரர்களிடமிருந்து மனக்கசப்பு நீங்கி தொழிலை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தை செயல்படுத்துவீர்கள். உத்யோகஸ்தர்களுக்கு அனுகூலம் உண்டாகலாம். சக வேலையாட்களால் பிரச்னை ஏற்பட்டால் விட்டுக் கொடுத்து போவது நல்லது. குடும்பத்தின் நிதி நிலைமை வசதிகள் தானாகவே வந்து சேரும்.





மிதுனராசி அன்பர்களே! குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பங்குதாரர்களிடமிருந்து இருந்த பிரச்னைகள் முடிவுக்கு வரும். உத்யோகஸ்தர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடன் பணி புரிபவர்களால் சற்று தொல்லைகள் வரலாம். குடும்பத்தில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படுவர். பெரிய தீமைகள் ஒன்றும் நடப்பதற்கு வாய்ப்பில்லை. வீடு, வாகனம் போன்றவைகளில் இருந்த இழுபறி நிலை மாறும்.





கடகராசி அன்பர்களே! முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். தொழிலில் ஏதாவது பிரச்னை இருக்குமாயின் அதை முன்னின்று தீர்த்து வைத்து தொழிலை செவ்வனே நடத்தி விடுவீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவர். சிலருக்கு அதில் உங்கள் மேல் பொறாமையும், விரோதமும் ஏற்பட வாய்ப்புண்டு. பழைய கடன்கள் வசூலாகும். செய்திகள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும்.





சிம்மராசி அன்பர்களே! மாற்றங்கள் வரும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். வங்கி மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து உதவிகள் எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம். உத்யோகத்தில் மேலிடத்தில் நற்பெயர் கிடைக்கும். நிலுவையில் இருந்த சலுகைகள் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது. குடும்பம் சுமூகமான சூழ்நிலையில் இருக்கும்.




கன்னிராசி அன்பர்களே! செயல்திறன் அதிகரிக்கும். தொழிலில் தடைப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து வர வேண்டிய வாய்ப்புகள் சிறந்த முறையில் வந்து சேரும். உத்யோகத்தில் உங்களை தேடி புதிய வாய்ப்புகள் துரிதமாக வரும். வெளிநாடுகளில் வேலை புரிவோர் தாயகத்திற்கு திரும்புவதற்கு முயற்சி செய்தால் இப்போது அது உங்களுக்கு பலிதமாகும். குடும்பத்தில் வருமானத்திற்கு குறைவிருக்காது.





துலாம்ராசி அன்பர்களே! வாழ்வின் முன்னேத்திற்கான வழிகள் பிறக்கும். தொழில் – வியாபாரம் ஏற்றம் தரும் வகையில் இருக்கும். தேக்கி வைத்துள்ள பொருட்களை விற்பனை செய்ய முற்படுவது நல்லது. நல்ல வாடிக்கையாளர்கள் கிடைக்கும் சமயமாக இது இருக்கிறது. உத்யோகஸ்தர்களுக்கு வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். சளைக்காமல் கொடுத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து பாராட்டு பெறுவர். சக பணியாளர்கள் உதவுவார்கள். கணவன் மனைவிக்கிடையே சுமூகமான உறவு இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! மற்றவர்களை பற்றி புரிந்து கொள்ள பல சூழ்நிலைகள் உருவாகும். தொழில்,வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறைந்து விற்பனை அமோகமாக இருக்கும். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மேலதிகாரிகளின் சில வேலைகளை நீங்கள் முன்னின்று செய்ய வேண்டியதிருக்கும். உடன் பணிபுரிபவர்களுடன் வெளியூர் பயணம் சென்று வருவீர்கள். குடும்பத்தில் தெய்வீக காரியங்கள் அதிகரிக்கும்.








தனுசுராசி அன்பர்களே! மனதிற்கு நிம்மதியான காலகட்டமாக இருக்கும். பெரியோர் பேச்சு கேட்டு நடப்பது சிறந்தது. ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள். தொழிலில் சக பங்குதாரர்களால் இருந்து வந்த பிரச்னை முடிவுக்கு வரும். உங்கள் பேச்சுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுத்து தொழிலை விரிவுபடுத்துவது பற்றி பேச்சை தொடங்குவார்கள். அது நன்மையில் முடியும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் குறையும்.




மகரராசி அன்பர்களே! உங்களின் வெற்றிக்கு வழிகாட்டுதல்கள் வந்து சேரும். தொழிலில் இருந்த சுணக்க நிலை மாறும். உங்களுக்காக உழைப்பவர்கள் இருக்கும் வரையில் உங்களை யாராலும் அசைக்க முடியாது. குடும்பத்தில் வேறொருவர் தலையீடு இல்லாமல் பார்த்து கொள்வது குடும்ப நிம்மதிக்கு வழிவகுக்கும். சிலரது பேச்சுகள் விதண்டாவாதமாக இருக்கும். விட்டுக் கொடுத்து செல்வதால் பிரச்னைகளை முற்றிலுமாக தவிர்க்கலாம்.




கும்பராசி அன்பர்களே! உடனிருப்பவர்கள் உதவிகரமாக இருப்பர். தொழிலில் இருந்த இடையூறுகளை களைவீர்கள். தொழிலாளர்களின் எண்ணங்களை நிறைவேற்றி மகிழ்வீர்கள். உத்யோகஸ்தர்கள் மேலதிகாரிகளால் நல்ல பாராட்டுகள் கிடைக்கப் பெறுவர். வேலைப்பளுவால் உடல் அசதி ஏற்படும். நேரத்திற்கு உணவருந்த முடியாமல் போகலாம். குடும்ப உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்து போவதால் இல்லத்தில் மகிழ்ச்சி




மீனராசி அன்பர்களே! பொருளாதாரம் ஏற்றம் பெறும். தொழில் வியாபாரத்தில் நிலுவையில் உள்ள பழைய பாக்கிகள் வந்து சேரும். தொழிலை விரிவு படுத்துவதற்கான முயற்சிகள் பங்குதாரர்கள் உதவியுடன் சிறப்பாக நடைபெறும். உத்யோகஸ்தர்கள் புகழ்ச்சிக்கு இடம் கொடுக்க வேண்டாம். சக ஊழியர்கள் நீங்கள் செய்யும் ஒவ்வொரு விஷயத்திலும் எதில் குறை கண்டுபிடிக்கலாம் என்று காத்துக் கொண்டிருப்பர். அதனால் கவனமுடன் பணியாற்றுங்கள்.


**வெள்ளிக்கிழமைகளில்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**eelanadu.ca**
**மின்னிதழ்**
**மூலமாகவும் வாசிக்கலாம்.**


# இலங்கையில் நிகழ வேண்டியது!

(19ம் பக்கத் தொடர்ச்சி) மக்கள் நலனை முன்னிறுத்திச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் தரப்புகளை அடையாளம் கண்டு அவற்றை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும். அவை சிறிய தரப்புகளாக இருக்கலாம். மக்களின் ஆதரவு அவற்றுக்குக் கிடைக்குமானால் அவை பெருஞ் சக்திகளாக உருவெடுக்கும். அப்படி நிகழும் போது ஒரு மாற்று அரசியற் கலாசாரமும் மாற்றுச் சூழலும் உருவாகும்.

உதாரணமாக, அடுத்து வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவதற்காக சஜித், ரணில், அநுர என ஒவ்வொரு தரப்பும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒத்துழைப்பதாகச் சொல்கின்றன. இதற்குக் காரணம், இந்தத் தடவை வழமைக்கு மாறாக மும்முனைப்போட்டியை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகும். அப்படியான ஒரு நிர்ப்பந்தம் வரும் போது தவிர்க்க முடியாமல் தீர்வைப் பற்றிப் பேசுவதற்காகக் படியிறங்கி வருகிறார்கள். இதை வாய்ப்பாக எடுத்து, உடனடியாகவே தேர்தலுக்கு முன்பே அதிகாரப் பகிர்வுக்கு முயற்சிக்க வேண்டும். அதற்கான நிர்ப்பந்தத்தை அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் தவிர்க்க முடியாமல் ஏதோ ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலை இந்தத் தரப்புகளுக்கு ஏற்படும்.

இதைப் போல நாட்டின் பொருளாதார மேம்பாட்டை எட்டுவதற்கான செயற்றிட்டங்களை முன்வையுங்கள் என போட்டியாளர்களிடத்திலும் ஆட்சியாளர்களிடத்திலும் மக்கள் கேட்க வேண்டும். மக்கள் சார்பாக ஊடகங்களும் மக்கள் அமைப்புகளும் மதத் தலைவர்களும் புத்திஜீவிகளும் கேள்வி எழுப்ப வேண்டும். ஏறக்குறைய அரவலயவைப் போல எழுச்சிகரமான ஒரு நிர்ப்பந்தக் கட்டமைப்பே இலங்கையில் மாற்றங்களை நிகழ்த்த வல்லது.

அத்தகைய எழுச்சியை அது கொண்டிராது விட்டாலும் அத்தகைய அறிவும் உணர்திறனும் கொண்ட மக்கள் கட்டமைப்பு கிராமங்கள், பிரதேசங்கள் தோறும் உருவாகினால் உருவாக்கப்பட்டால் நிச்சயமாக மாற்றத்துக்கான அரசியல் நிகழும். அல்லது அரசியல் மாற்றம் நிச்சயமாக நிகழும். இப்படித் தான் மாற்றங்களை நிகழ்த்துவதற்கு உழைக்க வேண்டியுள்ளது.

விடுதலையைக் காண வேண்டுமானால் அதற்காக நாம் கடுமையாகப் போராட வேண்டும். மாற்றங்களை நிகழ்த்த வேண்டுமானால் அதற்காகக் கடுமையாக உழைக்க வேண்டும். இதையே எதிர்பார்த்து நிற்கிறது இலங்கை.

# அர்ஜனாவும் இரும்பு மோதிரமும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) பொது மக்களில் தொடங்கி அரசாங்கம் வரை அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை பொறுப்புக்கூறல் என்ற வார்த்தைக்கு அதிகம் பிரயோக அழுத்தம் உண்டு. அரசியல் அடர்த்தி உண்டு. 2015 ஆம் ஆண்டு ஜநாவில் நிறைவேற்றப்பட்ட 30–1 தீர்மானம் பொறுப்புக் கூறலுக்கானது. அதாவது நிலைமாறு கால நீதிக்கு உரியது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது. இனப்படுகொலைக்கு யாருமே இதுவரை பொறுப்புக் கூறவில்லை. இவ்வாறு அரசியல் அர்த்தத்தில் பொறுப்புக் கூறப்படாத ஒரு நாட்டுக்குள், அல்லது பொறுப்புக்கூற யாருமற்ற ஒரு நாட்டுக்குள், பொறுப்புக் கூறலை பன்னாட்டு நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கும் ஒரு சிறிய மக்கள் கூட்டம், தனக்குள்ளும் அந்தந்தத் துறை சார்ந்து அல்லது ஆகக் குறைந்தது அவரவர் தமது மனச்சாட்சிக்காவது பொறுப்புக் கூறத் தானே வேண்டும்?

# தமிழ்பொது வேட்பாளர் நிறுத்தப்படுவாரா?

(17ம் பக்கத் தொடர்ச்சி) சிவில் அமைப்புகளும் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டியிருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தும் முயற்சி தோல்வியடையுமாக இருந்தால் மாற்றத்திற்கான அரசியல் நகர்வு தோல்வியுறும். இதிலுள்ள ஆபத்து என்னவென்றால், இவ்வாறான முயற்சிகள் தொடர்பில் பேசியவர்கள் பின்வாங்கும் போது, மாற்றத்திற்கான முயற்சிகள் வீணானவை என்னும் எண்ணமே மக்கள் மத்தியில் மேலோங்கும். ஏற்கனவே நம்பிக்கையிழந்திருக்கும் மக்கள் மேலும் நம்பிக்கையின்மையின் விளிம்பிற்கு செல்வர். இந்த பின்புலத்தில் நோக்கினால் முன்னர் தமிழ் மக்கள் பேரவையின் ஒதுங்கல் கட்சிகளிடையே மேலும் பிளவுகளை ஏற்படுத்துவதற்கே வழிவகுத்தது. தமிழ் பொது வேட்பாளர் முயற்சி தோல்வி. யுறுமாக இருந்தால் எதிர்காலத்தில் இவ்வாறான முயற்சிகளை மக்கள் ஒருபோதுமே ஆதரிக்கமாட்டார்கள்.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில்...

(8ம் பக்கத் தொடர்ச்சி) உயிருடன் உள்ள முன்னாள் ஜனாதிபதிகளான Bill Clinton George W. Bush Barck Obama ஆகியோர் மூன்றாவது பதவிக் காலத்துக்காகப் போட்டியிட முடியாது. 99 வயதான Jimmy Carter மட்டுமே மூன்றாம் தவணைக்கு போட்டியிடத் தகுதிமிக்க முன்னாள் ஜனாதிபதி. ஆனால், அது நடைமுறைச் சாத்தியமற்றது. எனவே ஜனநாயக கட்சி, தற்போது பெரும் சவால் மிக்க கால கட்டத்தில் உள்ளது. அமெரிக்காவும் தான். அமெரிக்காவிற்கு இது சோதனையான காலம்.

# தூர நோக்கற்ற தமிழர் அரசியலும் தென்னிலங்கை போலி வாதங்களும்

(20ம் பக்கத் தொடர்ச்சி) அதற்காகவே தமிழ் மக்கள் தமது பண்பாட்டையும் மரபுகளையும் பிரதேசத்தையும் பாதுகாப்பதற்கான எத்தனங்களை முன்னகர்த்த வேண்டும். அதற்கான தனித்துவங்களோடு நகர்த்த வேண்டும். தமிழ் மக்களின் ஒருமைப்பாடே அத்தகைய பலத்தை உறுதிப்படுத்த வழி வகுக்கும்.

தனிமனித வழிபாடுகளையும் கட்சிக் கதம்பங்களையும் விட்டு விட்டு ஐக்கியமாக எழுச்சியடைவதன் மூலமே ஜனநாயக அரசியல் வெளியை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

ஜனநாயகம் என்பது பெரும்பான்மை முடிவுகளோ தேர்தலோ மட்டுமல்ல. அதனையும் கடந்து புத்திபூர்வமான, தந்திரோபாயமான, ஒற்றுமைக்கான உபாயங்களைக் கொண்டதும் ஜனநாயகமே. அது அரசியலை மட்டுமல்ல பொருளாதாரத்தையும் சமூகத்தையும் பண்பாட்டையும் பாதுகாக்கக்கூடியது. ஜனநாயகத்தின் பலம் திரட்சியிலும் கூட்டுத்தன்மையிலும் அதிகம் தங்கியுள்ளது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation

10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6

OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

நாளை பற்றிய கவலையை தவிர்க்க நம்பிக்கையானது
காப்புறுதி ஒன்றே!
• Life Insurance
• Critical Illness Insurance
• Disability Insurance
• Mortgage Insurance
• Super Visa Insurance
• RESP, RRSP and TFSA
Arun KULASINGAM
Life Insurance Agent
416.357.2847
kulasingam33@yahoo.ca
iA Financial Group · Canada Protection Plan · Assumption Life · Foresters · KABIS

BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
உங்கள் சகல City Permit தேவைகளுக்கு
Kathir
416 856 6900
Subramaniam Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email:kathirhomes@gmail.com

# இலங்கையில் 2000க்கும் மேற்பட்டவர்களை பலி கொள்ளக்கூடிய திட்டம்! 2014ம் ஆண்டு ஷேக் ஒருவர் ஞானசார தேரருக்குத் தெரியப்படுத்தினாராம்

இலங்கையில் சுமார் 2000க்கும் மேற்பட்டவர்களை பலிகொள்ளக்கூடிய மிகவும் பயங்கரமான தாக்குதல் குறித்து ஷேக் ஒருவர் 2014ம் ஆண்டு எச்சரிக்கை விடுத்தார் என பொதுபல சேனாவின் பொதுசெயலாளர் ஞானசார தேரர் எச்சரித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது –

2014ஜீன் மாதம் 20ம் திகதி ஷேக் ஒருவர் பயங்கரவாத தாக்குதல் திட்டங்கள் குறித்த தகவல்களை எனக்கு தெரிவித்தார்.

திக்வெலவிற்கு வந்து தன்னை சந்திக்குமாறு அவர் என்னை கேட்டுக் கொண்டார். தங்களால் இந்த தாக்குதல் குறித்து தெரிவிக்க முடியாததால் எங்களை அது குறித்து நாட்டிற்கு தெரியப்படுத்துமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

தாங்கள் விடயங்களை பகிரங்கப்படுத்தினால் தீவிரவாதிகள் என குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்படுவார்கள் என அவர் அச்சம் கொண்டிருந்தார்.



சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் செல்வாக்கு காரணமாக இஸ்லாமிய தீவிரவாதிகள் மிகவும் பயங்கரமான தாக்குதலொன்றை ஆசியாவில் மேற்கொள்வதற்கு இலங்கையை தெரிவு செய்துள்ளனர் என அவ்வேளை பாதுகாப்பு செயலாளராகயிருந்த கோட்டாபய ராஜபக்சவிடம் தெரிவிக்குமாறு அந்த ஷேக் என்னை கேட்டுக் கொண்டார். அந்த தாக்குதல் இஸ்லாத்திற்கு அவமரியாதை ஏற்படுத்தும் விதத்தில் காணப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் பிரதான மதங்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் இந்த தாக்குதல்களால் 2000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவார்கள் மதநிகழ்வுகளில் இந்த தாக்குதல்கள் இடம்பெறலாம் என அவர் தெரிவித்திருந்தார்.

கடும் எதிர்வினைகள் எழக்கூடும் என்ற போதிலும் இது குறித்து பாதுகாப்பு செயலாளருக்கு தெரிவிப்பதை தவிர எங்களிற்கு வேறு வழியிருக்கவில்லை இதனை தொடர்ந்து பல அரசியல்வாதிகள் எங்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள் நாங்கள்தான் தீவிரவாதிகள் என்றார்கள் ஆனால் பாதுகாப்ப செயலாளர் அந்த தாக்குதலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தார்.

இதேவேளை நான்கு வருட கடூழிய கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கலகொட அத்தே ஞானசார தேரரை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கூரகல தொல்லியல் அமைவிடம் தொடர்பாக 2016 இல் கொழும் பில் நடத்தப்பட்ட ஊடக மாநா டொன்றில் இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் விதத்தில் கருத் துக்களை தெரிவித்த – மைக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நான்கு வருட கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட் டது. அத்துடன் அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இது தொடர் பான வழக்கு கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அண்மையில் இலங்கையில் சிங்கள பௌத்த தேசியத்திற்காக கலகொட அத்தே ஞானசார தேரர் கடந்த காலங் களில் குரல் எழுப்பியதாகவும் அவரை பொது மன்னிப்பில் விடுதலை செய்ய வேண்டும் என பிரதான மதகுருக்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE · CRITICAL ILLNESS · DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE · SUPER VISAS · RRSP & RESP
WE TRULY CARE FOR YOU & YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4